அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 3 விலை அ. 4	மன்மத ௵ ஆனி ௴ ஜூன்—ஜூலை—1955	வருட சந்தா ரூ. 2-4-0



ஐந்தெழுந்தைக் குழலிசையில்
அருள்தோயப் பாடி
அகிலமெலாம் வயப்படுத்தும்
ஆனய நாயனர்
(பெரிய புராணச் சித்திர விளக்கம் 15, பக்கம் 106)

பொருளடக்கம்

			பக்கம்
1.	சேக்கிழார்	(திருப்புகழ்மணி) ...	97
2.	நடமாடும் நம்பன்	(சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ...	99
3.	ஆனய நாயனர்	(கி. வா. ஜ.) ...	106
4.	பந்தமறு சிந்தனை	(எம். பி. தியாகராஜன் B.A.) ...	110
5.	பத்திராயு	(ரசபதி) ...	113
6.	வேண்டுமா வேண்டாமா	(பொன்னையாப் பிள்ளை) ...	124
7.	வீடு	(எம். வி. எஸ்.) ...	127
8.	வாழ்வற வாழ்தல்	(வா. ராமலிங்கம் பிள்ளை) ...	129
9.	மங்களா சாஸனம்	(அன்பன்) ...	132
10.	பக்தியின் சக்தி	(ஆ. கி. ரங்கராஜன்) ...	136
11.	The spirit of peace	(*Thiruppugal Mani*) ...	142

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ˝ முதல் பங்குனி மீ˝ முடிய வருட சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருட சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருட சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ஞு ஆனி மீ ஜூன்—ஜூலை - 1955	இதழ் 3

சேக்கிழார்

(திருப்புகழ் மணி)

சென்னைக்கு இருபது மைலுக்குள்ளாக குன்றத்தூர் எனும் கிராமம் உள்ளது. வயல்கள் சூழ்ந்தது. சோலைகள் செறிந்தது. நீர் வளமுண்டு. ஏரி நிறைந்தனைய செல்வன் கோவிலுண்டு. இந்த மகா க்ஷேத்திரத்தில் மகான் சேக்கிழார் அவதாரம் செய்தார். தமிழ் மறுமலர்ச்சியில் மிகவும் சந்தோஷத்தைத் தரக் கூடியன சேக்கிழார் கொண்டாட்டங்கள். சில நாட்களுக்குமுன், சேக்கிழார் நகரத்தில் ஒரு படித்திருவிழா நடந்தது. சுமார் ஒரு மைலுக்கு அருகாமையில் ஒரு குன்றம். பல மலை மேவிய குமரப் பெருமான் வீற்றிருக்கின்றார். அக் குன்றத்தில் இரண்டாவது ஆண்டு திருப்படித் திருவிழா நடந்தேறியது. குழந்தைகள் பெண்மணிகள் தேவாரம் ஓத, திருப்புகழ்

பஞ்ச விதவிடயம் பாங்காய்ப் பரம்புசிக்க
நெஞ்சேநீ நானெனவே நிச்சயிப்ப தென்னமதி

அடியார்கள் பாடிக்கொண்டே, பொருள் விளக்கத் துடன் படியேறி விழா நடத்தினர்கள். பெரிய பக் தர்கள் பலர் வந்திருந்தார்கள்.

மலையேறி முருகனைத் தரிசித்தால், வெளி வந்த வுடன் அங்கிருந்து திருநீர்மலை தரிசனம் காணப் படும். பச்சை விளக்கேற்றிக் கொண்டு பச்சை மாமலை வண்ணன் உறங்குகின்ருன். ஸ்ரீரங்க ஞாப கத்தை ஊட்டுகின்ருன்

'கருதுசெம்பொன் அம்பலத்தில்
ஒருகடவுள் நின்றுநடிக்குமே
காவிரித்திரு நதியிலே ஒருகருணை
மாமுகில் துயிலுமே.'

திருநீர் மலையில், ஸ்ரீ ரங்கநாதன் மலைமேல் படுத்து உறங்குவான் போலும். நீரை மலையாக்கி, ஆதிசேஷ சயனமுய் அமர்ந்திருக்கின்ருன் போலும். நில்லாத நீரை சடைமேல் நிற்பித்தான் சிவன் என்று பாடினர். நில்லாத நீரை மலைமேல் நிற்பித்து அதன்மேல் உறங்கும் காக்ஷி போலும் விஷ்ணு தருங் காக்ஷி. குன்றத்தூர், திருநீர்மலை, கோவூர் இவைகளெல்லாம் ஒரே பிரதேசம். வளப்பத்திலும் பக்தியிலும் சிறந்த நாட்டை சேர்ந்தன.

சேக்கிழார் உத்ஸவம் சென்னையில் பல இடங் களிலும் பெரிய புராண பாராயணத்துடன் நடக்கின் றது. இது இந்த நாட்டு மக்கள் செய்த புண்ணியம். பெரியபுராணம் பக்தியின் பிரவசனம். பக்தியின் உருவம் சேக்கிழார் திரு உருவம்.

அஞ்சு விதவிஷயம் ஆரும்அறி வாயிருக்கப்
பஞ்ச விதமாகப் பார்த்துழல்வ தென்னமதி.

நடமாடும் நம்பன்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை B. A. B. T.

(60-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருளம்மை

வேனிற்காலமாலை; வெயிலே இல்லாத பொதும்பர்ச் சோலை; தாமரை நிறைந்த தடாகம்; அதன் ஒருபால் தலை சாய்ந்து நிற்கும் மரக்கிளை; கிளைகளில் தேமாங் குயில் இன்னிசை பாடுகிறது. சோலை நடுவில் சுந்தர மங்கையர் கூட்டம். விண் மீன் நடுவில் வெண்மதி போலே தலைவி ஒருத்தி நிற்கிருள். கறுத்த குழல், வெளுத்த நகை, சிவத்த இதழ், மின்னலிடை, அன்ன நடை, அன்பே உருவம், அழகே ஆக்கை; மலைமகள் கருணையும் கலைமகளுணர்வும் கமலையின் எழிலும் அமைய நிற்கும் இம் மங்கை நல்லாளை 'அருளம்மை' என்று அழைத்தனர் பெற்ருேர்.

பந்தாடல்:

அருளம்மை தனது அருமைக் கரத்தில் ஒரு பந்திருந்து அழகு செய்கிறது. பந்து ஏந்தி நின்ற பாவையைச் சூழ்ந்த பாங்கியர்கள், தலைவியின் கருத்தறிந்து பந்தாடுதற்கெனப் பரவி நின்றனர். ஆட்டமும் ஆரம்பித்தது. ஆடலுடன் பாடலும் எழுந்தது. உடனே தலைவி:—

"ஈரமும் அன்புங்கொண் டின்னருள் பெற்றேன்
 என்மார்க்கம் இறவாத சன்மார்க்கத் தோழி!
காரமும் மிகுபுளிச் சாரமும் துவர்ப்பும்
 கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ ஒழியாதே அந்தோ!
 ஊழிதோ றூழியும் உலவாமை நல்கும்
ஆரமுதுண்டு என்னேடு ஆடேடி, பந்து
 அருட்பெருஞ் சோதிகண்டு ஆடேடி பந்து"

காண்பவனைக் காணுது காண்பவையைக் கண்டுழன்று
வீண்கால மாக விழற்கிறைப்ப தென்னமதி,

என்று பாடினுள். பாங்கியர்களும் உடலும் உள்ளலும் கரையக் கரைய உருக்கமாய்ப் பாடி ஆடினுர்கள். பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் மீண்டும் பிறத்தலும் போலப் பாங்கியர் கைகளிலிருந்து பந்து ஒரு சமயம் மறைந்து தலைவி கையில் தோன்றும், பின் மறையும். இப்படியாக ஆடும் ஆட்டம் தலைவியுள்ளிட்ட தோழியர் நாட்டத்தைக் கவர்ந்தது. ஒரு சமயம் தலைவி கையில் வந்த பந்தைப் பல மெல்லாம் கூட்டி வீசி எறியவும், அது நெடுந்தூரம் ஓடி மறைந்தது. உடனே பாங்கியர் கூட்டம் பல வேறு திசைகளிலும் பந்தைத் தேடி ஓடலாயிற்று.

பந்து தந்த பரிசு:—

தலைவியும் ஓடிய பந்தைத் தேடித் திரிந்தாள். கடைசியில் அவள் ஓரிடத்தை அடைந்தாள். அங்கே முழவம் முதலிய இன்னியங்கள் ஒலித்தன. யாழின் நரம்பொலிக்கும் குரலொலிக்கும் வேற்றுமையின்றிப் பாடப்படும் பண்ணமைந்த பாட்டொலி தலைவியின் கருத்தைக் கவர்ந்தது. திரிமுகக் காந்தம் சேர்ந்த வல்லிரும்பு அணையுமாப்போல், அருளம்மையும் பாட்டுக் கேட்ட பக்கமாய் நடக்கலுற்ருள்.

நடங் கண்ட நங்கை

திறந்தவெளி அதில் தெய்வீகக் காட்சி. குனித்த புருவம்; கொவ்வைச் செவ்வாய்; சென்மவிடாய் தீர்க்கும் திருமுறுவல்; பனித்த சடை, பவளமேனி, தவள நீறு, கட்டிளங் காளை ஒருவர் கால் தூக்கி ஆடுகிருர். 'ஆடிய காலும், அதிற் சிலம்போசையும், பாடிய பாட்டும் பலவான நட்டமும், கூடிய கோலமும் கொண்டாடியே நின்று, தேடிய நங்கை திகைத்திருந்தாளே.' 'புளிக் கண்டவருக்குப் புனலூறு மாப்போல், களிக்கும் திருக்கூத்துக் கண்டவள் தானும், துளிக்கும் கண்ணீரும், சோரும் நெஞ்சத்திருள், ஒளிக்கும் ஆனந்த அமுது ஊறும் உள்ளத்தே.' உடனே அருளம்மை, 'பண்டுதவத் திண்ணியோர் போற்றும்' திருநடக் கூத்தரே! எளியேன் 'சிந்தை படும் கண்ணியோ

ஈசன் வடிவாமே யெட்டுருவும் என்றுணர்ந்து
பாசந் தவிர்ந்தொழியப் பாராத தென்னமதி.

(வலையோ) நின் சிவந்த கால்?' பந்து தேடி வந்த என்னைச் சொந்தமாக ஏற்கவே, அந்தமாதியற்ற நடம் ஆடி ஆண்டு கொண்டனை, அண்ணல்! உன்னைக் கண்ட கண்கள் அயலே வேறு காணுமோ! பண்ணு லுன்னையன்றிப் பிற றைப் பரவுமாறு தோணுமோ! ஐயா! உன்னைப் பிரியகில லேன் அருள்புரிய வேணுமே! பைய என்னை விடுதியாயின் பழியும் வந்து சேருமே!" என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கதறி நின்றாள்.

அருளம்மை ஆட்பட்டல்:

உடனே பளீரென்று மின்வெட்டுப் போல ஓர் பேரொளி விளங்கியது. ஆடும் கூத்தன் ஓடி வந்து வாடும் மங்கையின் செங்கை பிடித்தான். மங்கையும் வாட்டந் தீர்ந்து அகமும் முகமும் மலர ஆனந்தக் கடலின் ஆழ்ந்தாள். கூத்தாடும் குமரனும் அரு ளம்மை செவியில் அருமொழிகள் சிலவற்றை மெல்ல ஓதினன். பாட்டும் நின்றது. பரதமும் முடிந்தது. அவை யுங் கலைந்தது. அருளம்மை தனித்து நின்றாள். திடீரென்று செங்கை பிடித்த செம்மலும் மறைந்தான். எல்லாம் கனவோ நனவோ என்று அருளம்மை கலங்கினள். வறி ஞன் ஒருவனுக்கு வழியிலகப்பட்ட பெருந்தனப் புதையல், இடையில் கள்வரால் பறிக்கப்பட்டாலெனச், சோர்ந்த உள்ளமும், அதனால் ஓய்ந்த நடையும் கொண்டு பந்தாடிய இடம் வந்து பார்த்தாள். சோலையே வெறிச்சென்றிருந்தது. பாங்கியர் அனைவரும் தலைமகள் வருகைக்காகப் பார்த்த கண் களும் பூத்துப் போகக் கவலையுடன் தமதில்லம் சேர்ந் தார்கள்.

அருளம்மை சோகம்:

தோழியரைக் காண முடியாததனல் அருளம்மை கவலை பெரிதாகி நொந்து வீட்டை நோக்கி நடந்தாள். காலந் தாழ்த்தும் கன்னி வராமையினல் கவலை கொண்டு காத்திருந்தாள் தாய். அருளம்மை வீட்டை அணுகியதும்

காரிய ரூபங்களெல்லாம் காரணமாக் காணுமல்
நாரிமனை யென்னதென நாடவந்த தென்னமதி

ஓட்டமாய் ஓடி மகளே! பந்தாடுமிடத்தில உனக்கென்ன நேர்ந்தது? வழியில் ஏதாவது தொல்லையா? முள்ளேது வாகிலும் காலில் தைத்துக் கடுந்துயர் விளைத்ததா? உன்னுடன் வந்த தோழிகளில் ஒருவராகிலும் உன்னுடன் துணைவர லாகாதா? என்று பல கேள்விகளை அடுக்கிக் கேட்டாள். அருளம்மை வேறொன்றும் கூறாமல் 'அன்னையே! அல்லல் ஒன்றும் இல்லை. எல்லாம் பின்னே கூறுகிறேன்' என்று கூறித் தனியே தன் அறைக்குள் போய்விட்டாள். அன்று அவளுக்கு உணவும் பிடிக்க வில்லை. உறக்கமும் பிடிக்கவில்லை. மறுநாளிலிருந்து அவள் வாழ்விலேயே ஒரு மாறுதல் காணப்பட்டது. கூட்டத்தை வெறுத்தாள். தனிமையை நாடினாள். ஆடம்பரமான ஆடையையும் அணிவகைகளையும் அறவே துறந்தாள். 'வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை' என்பதால் வெள்ளுடையையே விரும்பியணிந்தாள். எந்நேரமும் அவள் வாய் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தது.

பெற்றோரின் பெருங்கவலை :

அருளம்மைக்கு உண்ணலும் உறங்கலும் ஒழிந்தன ஊனுருகி நின்றாலும் உள்ளொளி நாளுக்கு நாள் பெருகுவதாயிற்று. அவளது உள்ள நிலையை உள்ளவாறு உணர மாட்டாத பெற்றோர், நோயுற்றாளென்று, மருந்துகள். பேய் முதலியவைகள் வசப்பட்டாளென்று மந்திரித்தும் பயன்படாமை கண்டு பரிதவித்தனர்.

அயலார் தூற்றும் அலர் மொழி :

"பந்து ஆடிய பாவையைச் சொந்தமாக்கிக் கொண்டான் எவனோ? யார் அறிவார்? அந்தக் காளைக்கே உள்ளத்தைப் பறிகொடுத்த பாவை பதைக்காம லிருப்பாளோ? அந்தரங்கத்தில் ஆசைகாட்டிப் போனதுரை மோசம் செய்து விட்டானோ? நாலுபேர் அறிய நாளது மணந்திருந்தால் இந்தத் தொல்லையெல்லாம் வந்திராதல்லவா?' என்று அருளம்மை நிலை கேட்ட அயலவர் அலர் தூற்றலாயினர்.

சும்மா தனியிருக்கும் தூயதாம் துரியமதில்
அம்மா தினமிருப்பது ஆகாதது என்னமதி.

கனாத்திறமுரைத்தல் :

அருளம்மை உடல் நிலையும் உள்ள நிலையும் சரிவர இல்லாமையாலும், அவள் முன்போல் தம்மைச் சேர்க்காமையாலும், தோழிகள் எல்லாம் ஒவ்வொருவராய் விலகிக் கொண்டனர். ஆயினும் ஆன்மநேய உரிமையுள்ள அறிவுடைய தோழி ஒருத்தி மட்டும், அல்லும் பகலும் அருளம்மையை அகலாது அவளுடனே இருந்து வந்தாள். அதனால் அருளம்மை அவளிடம்தான் மலர்ந்த முகத்துடன் உரையாடுவாள். ஓரிரவில் தலைவி தன் தோழியைத் தட்டி எழுப்பினாள். தோழி விழித்து, 'அம்மா! என்ன செய்தி?' என்றாள். தலைவி, தோழி! நான் ஓர் கனாக் கண்டேன் அதைக் கேள்" என்று கூறலாயினாள்.

"ஓரிடத்தில் கூத்தென்று எல்லோரும் போனார்கள். அவர்களுடன் நானும் போனேன். ஆட்டம் தொடங்கியது. என்னுடன் வந்தவர்கள் எல்லாம் தூரத்திலேயே வெளியில் நின்று விட்டார்கள். ஆடும் ஆட்டங் கண்டு நாட்டம் கொண்ட நான், கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஆடுமிடத்தை அடைந்தேன். ஆடும் கூத்து கண்டு உள்ளங் களித்திருக்கும் சமயம் ஒரு அற்புதம் நடந்தது. ஆஹா! அதை என்னென்று சொல்லுவேன். பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் கண்ணும் இமைக்காமல் ஆடுந் தலைவரையே நோக்கி நின்றனர். ஆனால் ஆடுந் தலைவனின் மங்கள முகத்தில் அன்பு மிக்க இளநகை தளதளவென் றொளிர்ந்தது. "நீதான் எம்மை நன்கறிந்தாய்" என்று கூறிக்கொண்டே அத்தலைவர் என்னிடம் ஓடிவந்து என் கையைப் பிடித்துக் கொண்டார்; நானும் என்னையே மறந்தவளாய், 'இவர்தான் என்னிறைவர்' என்று அவரது காலைப் பிடித்துக் கொண்டேன். உடனே அவர் 'பாவாய்! பாவச் சுமையறியாப் பேர் அறிவே வடிவமாய் என்று மகலாத பேரின்பம் எய்தி வாழ்க" என்றார். உடனே நான் அவரைப் பார்த்து "ஆடுகின்ற கூத்தரே! நீர் என்றும் ஆடும் இடந்தான் யாது?" என்றேன். உடனே

எவ்வுருவும் நாடி யிராக வெகுளியறத்
தவ்வலறச் சிவமாய்ச் சார்ந்தறியா யென்னமதி

அவர் வேடிக்கையாய், 'திருவும் சவுந்தரமும் பழமும் காட்டும் இடம்'—(திரு+சவுந்தரம்+பழம்—திரு+அ+பலம்—திரு அம்பலம்) என்றார். 'இதனை எனக்கு விளங்குமாறு உரைத்தருளுங்கள்' என்று வேண்டினேன். அவரும் சிரித்த வண்ணமாக 'முன்னும் பின்னும் ஒரே சொல்லிருக்க நடுவே பல்லிருப்பதுதான்" ('அம்' என்ற சொல் முன்னும் பின்னும் இருக்க நடுவே பல் உள்ளது—அம்+பல்+அம் அம்பலம்) என்று கூறி மறைந்தார். அவர் என்றும் வாழ்வாராக" என்று கூறி முடித்தாள்.

"தமையறியார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்ச்
  சபைநடங்கண் டுளங்களிக்குந் தருணத்தே தலைவர்
இமையறியா விழியுடையார் எல்லாரும் காண
  இளநகை மங்களமுகத்தே தளதளவென் றொளிர
எமையறிந்தாய் என்றெனது கைப்பிடித்தார் நானும்
  என்னைமறந் தென்னிறைவர் கால்பிடித்துக் கொண்டேன்
சுமையறியாப் பேரறிவே வடிவாகி அழியாச்
  சுகம்பெற்று வாழ்கென்றார் கண்டாய் என்தோழி!"

"ஆடும்கருணைத் திருநடத்தீர்! ஆடுமிடந்தான் யாதென்றேன்
பாடும்திருவும் சவுந்தரமும் பழமும் காட்டு மிடமென்றார்
நாடும்படிநன் கருளுமென்றேன், நங்காய்முன்பின் ஒன்றேயாய்
ஈடுந் தியபல் நடுவுளதால் என்றார்தோழீ! இவர்வாழி!"

இதுகேட்ட தோழி, 'அத்தகைய பெருமான் உன்னை கனவில் வந்து ஏன் காணவில்லை? இனி அவனை மறப்பதே நல்லது அல்லவா ?' என்றாள். உடனே தலைவி 'கண் படைத்துக் குழியில் விழுவதா? அவர் கணக்கெல்லாம் நான் அறிந்தும் அவரை விட்டுவிடுவேனோ?" என்றாள்.

இப்படி இருவரும் பேசிக்கொண் டிருந்ததைக் கேட்ட பெற்றோர், அருளம்மை உள்ளங் கவர்ந்த உத்தமனை யார் என அறிந்து அவளுக்கு இடையூறு யெதுவுஞ் செய்யாமல் அவள் கருத்துப்படி விட்டுவிட்டனர்.

நானெனவும் நீயெனவும் நாடலுட லைக்குறித்தே
ஞானமயம் ஒன்றெனவே நாடாத தென்னமதி

நம்பரை நங்கை கூடுதல் :

ஒரு நாளிரவு அருளம்மை மிகப் பொலிவுடன் காணப் பட்டாள். தனது பள்ளி யறையைத் தூசுகள் போக்கிச் செம்மையாய் அலங்கரிக்குமாறு தன் தோழிக்கு உரைத் தாள். தோழி 'என்ன விசேடம்? "என்ருள். அம்மை, 'தோழீ! என் தலைவர் காலையில் வரப் போகிருர்" என்ருள். ஆனல் தோழி இதனைப் பொருள்படுத்தாமல் அவளது பெற்ரேரிடம் போய், "அருளம்மையின் போக்கே அதிசய மாய்த் தோற்றுகிறது. என்னவோ, தலைவர் காலையில் வருவார் என்றும், பள்ளியறையை அலங்கரிக்குமாறும் அருளம்மை கட்டளை" என்று சொல்லிக் கொண்டிருந் தாள். உடனே அருளம்மையின் கோபக் குரல் கேட்டது. தோழி ஓடிவந்தாள். 'என்ன வேலையிலாதவள் போல வம்பளந்து கொண்டிருக்கிருய்? விடிந்ததும் நான் தனித் திருக்கவேண்டும். ஆகையால் சோலையில் மலர் கொய்து வந்து மாலை கட்டி வெளியே யிரு. எனது தலைவர் வந்த வுடன், நான் அவரைக் கலந்து கூடியபின் உன்னை வந் தழைக்கின்றேன்" எனக் கூறிவிட்டுப் பள்ளி அறைக்குள் போனுள். பாங்கியும் மலர் கொய்து மாலை புனைந்து வெளி யிலிருந்தாள். அதிகாலையில் கலீரென்று ஒலி கேட்டது. ஆடும் கூத்தின் அரவமும் திருச்சிலம் போசையும் கேட்டன. கதவு திறந்தது. 'தோழீ' என்ற குரல் கேட்டது. தோழி மாலையை நீட்டினுள். பேரொளி எங்கும் கவிந்தது. அறை யில், கூத்த ரொருவர் ஆடுகின்ருர். உடனே அருளம்மை, 'ஆடுகின்ற அரசே! என் அலங்கல் அணிந்தருளே' என மாலை சூட்டினுள். உடனே கூத்தர் அம்மையின் செங்கை பிடித்து அருகணைத்துக் கொண்டார். ஒளி மறைந்தது. பின் அங்கே அருளம்மையோடு ஆனந்தக் கூத்தனையும் காணவில்லை. உடனே தோழி இச் செய்தியைப் பெற் ரோர்க்குக் கூறவும், அவர்கள் அருளம்மை ஓர் தெய்வப் பிறவி என்றும், அதனுலேதான் தெய்வ நடத்தரசனுடன் 'புக்கு ஒன்றி உடன் ஆனுள்" எனவும் போற்றினர்.

பொய்யைப் பொருளாகப் புன்மதியால் கண்டதுபோல்
மெய்யையுணர்ந்து அத்துவிதம் வேண்டாத தென்னமதி

அந்த நடங்கண்ட நங்கையாம் அருளம்மையே 'இராம லிங்க அடிகள்' என்று உலகம் இன்றும் போற்றுகிறது என்றால், தில்லைப் பெருமான் திருக்கூத்துக் கண்டாரைப் பிணித்துக் கனிவிக்கும் சிறப்புடையது என்பதில் ஐயமுண்டோ?

(தொடரும்)

பெரிய புராணச் சித்திர விளக்கம்: 15.

ஆனாய நாயனார்

(கி. வா. ஜ.)

(93-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் குலத்தில் அணி விளக்காகத் தோன்றினவர் ஆனாய நாயனார். ஆயர்கள் பசு, எருமை, ஆடு என்னும் மூவகை இனங்களையும் மேய்ப்பார்கள். ஆனாயர் ஆனினங்களை மாத்திரம் மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டார். அவருடைய இயற்பெயர் வேறு என்றே தோற்றுகின்றது.

இப்போது திருவானைக்கா இருக்கும் இடத்தைச் சூழ்ந்த இடங்களுக்கு மழநாடு என்ற பெயர் பழங்காலத்தில் வழங்கி வந்தது. அதன் மேற்பகுதி மேல் மழநாடு. அந்நாட்டில் திருமங்கலம் என்ற ஊரில் ஆனாயர் உதித்தார்.

அவ்வூரைச் சுற்றி முல்லை நிலமாகிய காடுகள் அடர்ந்திருக்கும். ஒவ்வொரு நாளும் ஆனாயர் ஆநிரைகளை முல்லை நிலத்துக்குக் கொண்டு சென்று மேயவிட்டு மாலையிலே அழைத்து வருவார். அவர் சிவபிரானிடம் ஆழ்ந்த பக்தி உடையவர். மனமொழி மெய்களால் சிவபெருமானது தொண்டை இடைவிடாமல் செய்பவர்.

ஒவ்வொரு நாளும் அவர் கன்றுகள், பால் மறந்த பசுக்கள், கறவை மாடுகள், சினைப் பசுக்கள், கன்று

எப்பொழுதும் தன்னையன்றி யாதுவந்தது யாதொழிந்தது அப்படியே யெண்ணி அமையாத தென்னமதி

போட்ட பசுக்கள், காளைகள் ஆகியவற்றை நிரை நிரையாக ஓட்டிச் சென்று புல் உள்ள இடங்களில் மேயவிட்டு நல்ல தண்ணீரை அருந்தச் செய்வார். காட்டு விலங்குகளால் அவற்றிற்கு இடையூறு ஒன்றும் நேராமல் பாதுகாப்பார். அவரைச் சார்ந்து வேறு பல கோவலர்கள் இத்தொழிலுக்கு உதவி புரிந்து வந்தார்கள்.

ஆனய நாயனார் முல்லை நில மக்களின் இயல்புக்கு ஏற்பப் புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லவரானார். சிவ பெருமானுடைய புகழைப் பாடும் பாடல்களைக் குழலில் ஊதி இன்புறுவார். இறைவனுக்குரிய ஸ்ரீ பஞ்சாட் சரத்தையே இசைக்கு ஏற்றபடி அமைத்து வேய்ங்குழலில் பாடப் பயின்றார். அதில் அவர் வல்லவரும் ஆனார்.

ஆயர்களுக்குரிய ஆடை அணிகளுடன் ஆனயர் ஒரு நாள் ஆநிரையை மேய்த்து வரும் பொருட்டுப் புறப்பட் டார். அப்போது கார்காலம் தன்னுடைய எழிலெல்லாம் காட்டிப் பரந்தது. கார்காலத்தில் கொன்றை மரம் பூத்து விளங்கும் காட்டுக்கு வந்த ஆனயர் தம் எதிரிலே பொன் னிறம் பெற்ற மலர்கள் பூத்துக் குலுங்கும் கொன்றை மரம் ஒன்றைக் கண்டார். கொத்துக் கொத்தாகப் பூக்கள் நிறைந்து விளங்கிய அதைக் கண்டவுடன் நாயனாருக்குச் சிவபெருமானே நேர் நிற்பது போன்ற உணர்ச்சி உண்டா யிற்று. அவரிடம் இயல்பாக இருந்த பக்தி பொங்கி எழுந்தது. உடனே அம்மரத்தின் அருகில் நின்று தம் குழலையெடுத்துத் திருவைந் தெழுத்தை இசையுடன் அமைத்து வாசிக்கத் தொடங்கினார். தம்முடைய திரு அதரத்தில் குழலை அமைத்து வண்டு பூவில் மொய்ப்பது போல விரலால் துளைகளை வருடிப் பாடலானார். முதலில் சுருதி சோதனைசெய்து, ஆரோகண அவரோகணம் கூட்டிப் பிறகு முல்லைப் பண்ணை வாசித்து, அப்பண்ணில் திருவைந் தெழுத்தை அமைத்து ஊதினார். மந்தரம், மத்திமம், தாரம் என்ற மூன்று ஸ்தாயிகளிலும் அவர் இசை பெருக்கினார்.

மாயா இருளிரவில் வந்தகனை விட்டொழிந்து
நீயாம் நிலைதனிலே நில்லாத தென்னமதி

அவர் ஊதியபோது பரவிய இசை கல்லையும் கரைக்கும் படியாக அமைந்தது. தேனையும் அமுதையும் கலந்து வெள்ளமாக ஓடவிட்டது போன்றிருந்தது. அந்தத் தெய் வீக இசை மக்களை மாத்திரமன்றி மற்ற உயிர்களையும் கவர்ந்தது. அறுகம்புல்லை நிறையக் கறித்து அசைபோட்டுக் கொண்டிருந்த பசுக்கள் அசை போடுவதை மறந்தன. தாயின் மடியில் வாய் வைத்துப் பாலைக் குடித்துக் கொண் டிருந்த கன்றுகள் பாலுண்ணுவதை மறந்தன. காளைகளும் மான்களும் பிற விலங்குகளும் மயிர் குத்திட்டு நிற்கத் தம்மையே மறந்து வந்து சூழ்ந்து நின்றன. மயில்கள் ஆடுவதை மறந்து அருகே வந்தன. மற்றப் பறவைகளும் அந்த இசை வெள்ளத்தில் அகப்பட்டு அங்கே வந்து படிந்தன. வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஆயர்கள் வேலையை மறந்து வாய் திறந்தபடியே குழலிசையில் ஈடுபட்டார்கள்.

ஆகாச வாசிகளாகிய இயக்கர், கின்னரர், கந்தர்வர் முதலியோர் விமானங்களில் வந்தவர்கள் அப்படி அப் படியே அந்தரத்தில் நின்று விட்டார்கள்.

இசையென்னும் வெள்ளம் அலையலையாய் மோத அதற்குள் யாவரும் படிந்து தம் உணர்வை ஒழிந்தனர். அந்த வெள்ளம் மென்மேலும் உயர்ந்து பரவியது. இயற் கையில் நலிபவர்களும் நலியப்படுபவர்களும் தம் வேறுபாடு ஒழிந்து அந்த இசையில் ஒன்றி நின்றார்கள். பாம்பு மயிலின் மீது மயங்கி விழுந்தது. சிங்கமும் யானையும் அருகருகே நின்றன. புலி வாயைத் திறந்தபடியே நிற்க அதன்முன் மான் நின்றது. அதன் வாயில் அரைகுறையாகக் கறிக்கப் பட்ட புல் தொங்கியது!

காற்றும் வேகமாக வீசவில்லை; மரங்கள் கிளைகளை அசைக்கவில்லை; அருவிகளும் காட்டாறுகளும் சலசல ஓசை யின்றி அமைதியாக ஓடின. மேகங்கள் அப்படி யப்படியே நின்று விட்டன. கடலும் அலையோய்ந்து கிடந்தது.

முன்னடங்கும் வாதனைகள் முற்றும் தவிராமே
இன்னம் இனந்தாங்கி யிரங்குவதும் என்னமதி

இப்படியாக சராசரங்கள் யாவும் இசைமயமாகி அறிவும் கரணங்களும் ஆனயருடைய குழலோசையில் கரைந்து போக நின்றன. மெய்யன்பராகிய அவர் இசைத்த குழலோசையின் கான வெள்ளம் வையகத்தை நிறைத்தது: வானத்தையும் தன் வசமாக்கியது. அது பின்னும் உயர்ந்து ஆனந்த தாண்டவ மூர்த்தியாகிய பரசிவனது திருச் செவியினருகில் அணைந்தது. அவ் வோசையைச் செவியால் ஏற்று இசைக்கு மூலகாரணராகிய சிவபெருமான் எம்பெருமாட்டியுடன் இடப வாகனத்தின்மேல் ஏறி வானிடையே எழுந்தருளி வந்து ஆனய நாயனார்முன் நின்றான்—நாயனருடைய பக்தியை வியந்து, "இந்த நிலையில் நம்மிடம் வருவாயாக!" என்று அருள் செய்தான்.

தேவர்கள் மலர்மாரி பொழியவும் முனிவர்களும் வேத முழக்கம் செய்யவும் ஆனய நாயனார் புல்லாங்குழல் இசைத்தபடியே சிவபெருமானுடன் சென்று மீளாத பேரின்ப வாழ்வு பெற்றார்.

கலையில் திறமையுடையவர்கள் அந்தக் கலையை இறைவனுக்கே உரிமையாக்கினால் மற்றவர்களை இன்பம் துய்க்கப் பண்ணுவதோடு தாமும் பேரின்பத்தை யடையலாம். இறைவனுக்கு அர்ப்பணம் பண்ணாமல் கலைத் திறமையில் நாம் சிறந்தோம் என்ற நினைவோடு வாழ்பவர்கள் அகங்காரம் உடையவர்களாய், பொறாமை, பகை ஆகியவற்றுக்கு ஆளாகிக் கலையையும் தம் வாழ்க்கையையும் வீணே போக்குவார்கள்.

ஆனயர் கலையை ஈசுவரார்ப்பணம் ஆக்கினமையால் அவர் இருந்த நிலத்திலே இயற்கையான பகைகூட ஒழிந்து விட்டது. எல்லா உயிர்களும் ஒரே உணர்வை அடைந்தன. இறைவன் திருவருளும் அவருக்குக் கிடைத்தது.

ஆகாத வாதனையால் அல்லல்தினம் பட்டுழன்றும்
ஓகோ இனந்தவிரா(து) உழலுமதி யென்னமதி

பந்தமறு சிந்தனை

(M. P. தியாகராஜன் B. A.)

"பாரொடு விண்ணுய்ப் பரந்த எம்பரனை," அந்தப் பரம சிவத்தை வேதாகம சாஸ்திரங்களால் அளவிட்டறியக் கூடாது. மற்றும் ஏனைய பொருள்களை யறியும் கருவிகளாகிய மனோவாக்குக் காயங்களாலும் அறியப்படமாட்டாது. "கண்ணுடியில் கடலைக் கைவசமாகக் காட்டுதல் போலும்" குறிப்பால், மௌன முத்திரை முதலியவற்ருல் அச் சிவத்தை அடைய உபாயம் அறிவித்தல் கூடும். ஒருவனுக்கு மூன்ரும் பிறைச் சந்திரனைக் காட்டும்பொழுது விரலால் சுட்டிக்காட்டி அறிவிக்க, அவ்விரல் நேரே நோக்கி அப் பிறையை தரிசித்தல் போல திருவருளை முன்னிட்டுக் கொண்டு சிவனைத் தெரிசிக்க வேண்டும். கண் போலும் ஆன்மா. விரல் போலும் திருவருள். பிறை போலும் சிவம். இந்த உபாயத்தையே உணர்த்த "பற்றற்ருன் தாளிணையே பற்றுக பற்று விடற்கு" என்று திருவள்ளுவர் கூறுகிருர். "மற்று நான் பற்றிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் வேண்டுகிருர். பற்றற்ருன் தாளினை யெப்படிப் பற்றுவது? பற்று நான் மற்றிலேன் என்ற நிலையிலிருப்பது எவ்வண்ணம்? என்ற விசாரணைக்குப் பின்வரும் பிள்ளைத் தமிழ் விளக்கங் கூறுகிறது. இதில் சிதம்பர சுவாமிகள் முருகனின் செங்கீரைப் பருவத்தை வியந்து போற்றுகிருர். அவ்வாறு போற்றுதலில் ஒருண்மை உபதேசத்தையும் வைத்துப் பாடுகிருர்.

ஐந்தொழிலு மெனநிவைக ளாகுஞ் சிருட்டிமுத
லான முத்தொழில் சடத்தும்
அறிவிடத் தோரிரண்டும் வினைக்கிடாய்
அவற்றையுயி ரறியாமையால்

பேதமுறு புந்திதனைப் பேதித்(து) அகற்ருமல்
ஆகமயல் கொண்டுநவை ஆகுமதி யென்னமதி

முத்திவரு தன்னையும் பிறரையுங் கருதிநனி
முதிர்விழைவு வெருளி மருவி
முன்னுசுக துன்பங்கள் மன்னியிரு வினைமேவி
மூடப் பிறப்பி லாழும்

பந்தமுறு முயிர்சுதந் தரமிலி சடம்பாச
மான கருவிகள் முழுதுமே
பகருமற் றவைநடத் திடுமொருவ னுனிவை
பகுத்துன் சுதந்திரமறச்

சிந்தனைசெய் பந்தமறு மென்றெனக் கருள்குரவ
செங்கீரை யாடி யருளே
திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடி யருளே

[திருப்போரூர் சந்நிதி முறை.]

சிவனது பஞ்சகிருத்தியங்கள் யாவை எனின் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம். இவையே ஐந்து அவத்தைகளாக ஜீவர்களுக்கமையும். அவையாவன சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், இருவினை யொப்பாம்.

அஞ்சு தொழிலாவதுவே யஞ்சவத்தை எஞ்சலிலா
அஞ்சிடத்துங் கொள்ளிவட்ட மாகவே—பஞ்சவன்னம்
வைத்த படிகம்போன் மாறு துனைமயக்கும்
சித்திரக்கூத் தாகத் தெளி

(ஒழிவிலொடுக்கம்.)

ஐந்தவைத்தக ளிடத்தும் கொள்ளிவட்டம் போலாக அதிசீக்கிரமாய் மாறிமாறிச் சுழற்றி வைக்கப்பட்ட பஞ்ச வர்ணத்தின் மயமாம் படிகம்போல், ஜீவன் சார்ந்த அவத்தை யாதோ அதன் மயமாகி இடையறுது மயங்குதல் அவனது அழகிய திருக்கூத்தாகும்.

கற்பிதத்தை மெய்யாகக் கண்டுகண்டு துன்பமுறு(து)
அற்புதமாம் சின்மயம்நீ ஆகாத தென்னமதி

சிருட்டி, ஸ்திதி, சங்காரம் ஆகிய முத்தொழில் சடத்தினிடத்தும், திரோபவம்·அனுக்கிரகம் உயிர்களிடத்தும், ஆன்மகோடிகளின் வினைக்கீடாய் சிவனால் நடத்தப்படுகிறது. ஆணவ மறைப்பினால் ஜீவர்கள் அதைஉணராது தன்னையும், தன்னைப்போலொத்த பிறரையும், நட்பினர், பகைவர், சுற்றத்தார், அயலார் எனக் கருதுவதில் விருப்பு வெறுப்புகளில் பொருந்தி, அவற்றால் ஏற்படும் சுக துக்கங்களை அனுபவித்துப் பிறந்து பிறந்துழலும் பந்தத்தால் துன்பப் படுகின்றனர். எனவே "உயிர் சுதந்திரமிலி" என்று கூறுகிறார். ஜீவன் சுதந்தரமற்றது. அதனுடன் சம்பந்தப்பட்ட கருவிகரணாதி தத்துவங்கள் யாவும் சடமாம். "இவைகளை நடத்தும்படியானவன் நான் ஒருவனே" எனச் சரவண முருகன் சிதம்பர சுவாமிகளுக்கு அருளியதாக மேற்படி பிள்ளைத்தமிழ் கூறுகிறது. அப்படி அருளிய வண்ணம்"பகுத்துன் சுதந்திரமறச் சிந்தனை செய் பந்தமறும்" என்னும் உபாயத்தையும் கூறுகிறார். எனவே தன்னாலும் பிறராலும் ஏற்படும் சம்பவங்களும், சூழல்களும் தம்தம் வினைக்கீடாய் அவனால் ஏற்படுத்தப்படுகிறது என்று எண்ணி, தீவினைச் சூழல் நீங்கவேண்டுமெனின் நல்வினைப் பெருக்கத்தால் அமைத்துக் கொள்ளல் வேண்டுமே யொழிய, சூழல்களைத் தகர்க்க தற்போதத்தால் முயலுதல் மயக்க அறிவால் ஏற்படும் குற்றமாகும்.

இதையே ஞான சாதனமாகக் கொள்ளப்படுகிறது. "சும்மா இரு சொல்லற" என்று அருணகிரியாருக்குப் பெம்மான் முருகன் உபதேசித்ததாகக் கந்தரனுபூதி கூறுகிறது. அந்த அனுபவத்தை விழைந்து சிதம்பர சுவாமிகள் மற்றோரிடத்தில்,

"சும்மா இருவெனநீ சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றுரைத்த—எம்மான்
அருணகிரி நாதன் அநுபவம் நாயேற்குக்
கருணைபொழி போரூரா காட்டு"

என வேண்டுகிறார். இதையே பெரிய ஆப்தமொழி யென்று தாயுமானவர், "அவனன்றி ஓரணுவு மசையாது எனும். பெரிய ஆப்தமொழி ஒன்று கண்டால்,

---

சுட்டற்ற வெட்டவெளி தோயாமல் நாமவுருச்
சுட்டி யனுதினமும் துன்பமுறல் என்னமதி

யாது முனையன்றி யுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே.

என்று பாடியுள்ளார்.

இங்ஙனமாக சிந்தனையை அருள்வழி செலுத்த விருப்பு வெறுப்புக ளொழியும். அவை ஒழியவே இருவினையொப்பு உண்டாகும். சித்த சுத்தியுண்டாம். அடிப்பட்ட ஒருமை மனத்துடன் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே "கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே."

சிவனடியார் 3

பத்திராயு

(ரசபதி)

தசானனம் என்றொரு நகரம். வளம் நிறைந்த அந் நாட்டு மன்னன் வச்சிரவாகு. பார்த்திபனுக்கு மனைவியர் பலர். சுதமதி யென்னும் முதல் மனைவி, குணநலம் சிறந்த கோதை. அவளுடன் இணைபிரியாமல் அரசன் இருந்தான். சுதமதி கருப்பம் எய்தினள். மன்னன் அது கண்டு மகிழ்ந்தான். சககளத்தியர்க்கோ, குதூகலம் அழிந்து குறுகுறுத்தது மனம்.

முன்னமே மூத்தாள்மேல் அன்பு கொண்டிருக்கும் அரசர், புத்திரப் பேற்றின் பின் அடியொடு நம்மை மறப் பர். வருமுன் காப்பிற்கு வழி செய்ய வேண்டும். என்ன வழி செய்வது என்று பல நேரம் எண்ணினர். மூத்தாள் கருவைச் சிதைப்பது என்று முடிவு கட்டினர். அது கருதி, சுதமதியுடன் பெரிதும் நயமொழி பேசினர். நாடக அன்பை நடத்தினர். சுதமதிக்கு, உணவில் விடம் கலந்து ஊட்டினர்.

நிற்க நிறுத்த நிலையாத நீசமனத்
துற்சங்கம் நீங்கிச் சுகமாகா தென்னமதி.

விறுவிறுத்து உள் புகுந்தது விடம். எரிச்சல் வயிற்றில் எழுந்தது. எரிந்து உருவம் கரிந்தது. சுதமதிக்குப் பலவகை நோய்கள் படர்ந்தன. எதிர்வினைப் பயனுல் இறந்திலள்; இறவாமல் சிசுவும் பிறந்தது. எனினும், தாய்க்கும் சேய்க்கும், புண்ணுகி உடலம் புழுத்தது. மூளும் எரிவு தாங்கவே முடியவில்லை. இரவும் பகலும் அழுத ஒலியால், அரண்மனை முழுதும் ஒரே அதிர்ச்சி.

அரச மருத்துவர் அரும்பாடு பட்டனர். இறுதியில், காப்பது முடியாதென்று கை சோர்ந்து போயினர். ஒவ்வொரு நாளும் ஓயாத கதறல்; எத்தனை நாளாக இந்த வேதனை? இளம் மனைவியர் செயல் இவை எனஅரசன் அறியான்; சுதமதியும் அறியாள்; ஊகித்து மருத்துவர் உணர்ந்தனர். வெளியிற் சொன்னுல் வெட்கக் கேடு; விபரீதமும் ஆகும் என்று வாய் மூடினர்.

வேந்தன் ஏகபத்தினி விரதம் இருந்தால் எவ்வளவோ நலமாயிருக்குமே! பலரை மணந்தவன், ஒவ்வொருவர் இடத்திலும் பட்சம் காட்டியிருந்தால் ஆகாதா? சகக்ளத்தியர்தான் சிறிது சாந்தம் கொள்வது இயலாதா! மாறி அமையும் மனநிலையால், இடரைப் பெருக்கும் வாழ்க்கை யென்பதே இதுதானு?

மனைவியின் நிலை கண்டு, மன்னற்குச் சலித்தது மனம். பொல்லாத இந்நோய் தீரப்போவதோ இல்லை. இறந்தாலும் நலம். அதுவும் ஆனதில்லை. உருத்த நம் பாவம் இவர்களாக உருவம் கொண்டு வந்ததோ? புண்ணுன இவர்தம் உடலை, காணக் கண்கள் கூசுகின்றன. கதறு குரலோ, கேட்கச் சகிக்கவில்லை. நரக வேதனை யிதுதானு ?

யாரடா அங்கே! இங்கே வா! குரூபிகளான இவர்களைத் தேரில் கொண்டு போ. வேனில் கானில் விட்டு வா! நிற்காதே! உம். சீக்கிரம் என்று உருத்துச் சொன்னுன் மன்னன். செங்கோலுக்கு மிஞ்சியும் சங்கேதம் உண்டா?

அது கேட்டுச் சுதமதி அலறினள். காதைப் பொத்திய படி காவலன் அகன்றுன். மற்ற மனைவியர் மகிழ்ந்தனர். அவர்கள் சாகஸம், அரசர்க்கு அமைதியை அளித்தது.

தட்டத் தடுக்கத் தடைபடா நீசமனத் .
துட்டப் பிசாசோடும் தோயுமதி யென்னமதி.

வேந்தன் ஆணைப்படி விரைந்தது தேர். அதி பயங்கர ஆரண்யம். கொண்டவன் குதிரை யென்றால், கண்டவன் கழுதை என்பான். இது பாவ உலகப் பழமொழி. அதற்கு ஏற்ப, மார்பில் மகனைச் சார்த்திச் செய்வது அறியாமல் திகைத்திருந்த தேவியை, தேர்ப்பாகன் கோலால் கொட்டித் தள்ளினன். தாயும் சேயும் நிலத்தில் விழுந்தனர். நகர் நோக்கி விரைந்தது தேர்.

உடல் எரிவு, விழுந்த அதிர்ச்சி, வெய்யிலின் கொடுமை, குழந்தையின் வீறிடல் முதலியவற்றால் திகைப்பு விளைந்தது. அடிவயிறு குழம்பியது. என்பால் அரசர்க்கு எவ்வளவு அன்பு! என்ன ஏமாற்றம்! எப்படி விளைந்தது இவ்வளவும்? ஒன்றுமே தோன்றவில்லையே!

சுதமதி, விதி செய்த சதியை வெறுத்தாள். கோபதியை எண்ணிக் கொதித்தாள். அழுத கண்ணீரால் ஆடை நனைய, பசியால் கதறும் குழந்தைக்குப் பாலூட்டினாள். படர்ந்து பாதித்தது பசி. வெய்யிலால் நாக்கு வறண்டது. எங்கிருந்தோ விலங்குகளின் முழக்கம் கேட்கிறது. அதனால், அங்கிருந்து சிறிது அமைதி பெறவும் வழியில்லை. மகனைத் தோளில் கிடத்தி எழுந்தாள். தள்ளாடித் தடுமாறி நடந்தாள். மனம் போன வழியே சென்றாள். தூரத்தில் ஒரு கிராமம் கண்ணிற்குத் தெரிந்தது.

அங்கே சென்று பிட்சை எடுப்பம். அநியாயப் பசி அடங்கும்; அடிக்கடி அழும் சேய்க்குப் பாலூட்ட அது தானே வழி. இதற்கு நாணம் அடைவது கூடாது என்று மனம் எண்ணியது. அன்று அரசி; இன்று பிட்சைக்காரி. விதியின் விளையாடல் இதுதானோ?

★ ★ ★

பெருந் தனவணிகரும், தர்மசிந்தனை யுடையவருமான பத்மாகரர் திருமாளிகைப் பணிப் பெண்களுள் ஒருத்தி, புண்பட்ட உடலுடன், நோய்ப்பட்ட சேயுடன் கண்ணீர் சிந்தி வரும் சுதமதியைக் கண்டாள்.

ஐயோ பாவம்! யார் அம்மா நீ ?

பாவி அம்மா நான் பாவி! என் வரலாறு இது என்று சுருக்கிக் கூறிச் சோர்ந்து விழுந்தாள் சுதமதி.

கட்டப் பிடிக்கக் கடந்தோடும் ஈனமனச்
சுட்டகற்றித் தற்பதத்தைத் தோயாத தென்னமதி.

பயந்து போன பணி மகள், விரைந்து சென்று வணிகரிடம் வரலாறு கூறினள். அருள் மிகுந்த பத்மாகரர், பணிமாதர் மூலம் சுதமதியை மாளிகையுள் சேர்த்தார். மூர்ச்சை தெளிய முயற்சிகள் நடந்தன.

தக்க மருத்துவர்களைத் தருவித்தார். இவள் என் தாய். குழந்தை என் தம்பி. இவர்கள் நோயை நீக்குங்கள்! தாராளமாகப் பொருளைத் தருகிறேன் என்றார். தரும குணம் மிக்க அவரும், அவர் மனையாளும் சுதமதிக்காகப் பட்ட பாடுகள் பல. ஆ! இரக்கம் என்பது இதுதானே?

மருந்துகள் மகத்தானவை. எனினும், நோயால் உடலம் நொடித்தது. ஒரு நாள், அழுது துடித்த மைந்தன் ஆவி அடங்கியது.

நீட்டி நிமிர்ந்த மைந்தன் உடலைக் கண்ட சுதமதிக்கு, உலகமே இருளடைந்ததுபோல் தோன்றியது. அடியற்ற மரம்போல் வீழ்ந்தாள். புரண்டு நிலத்தில் புலம்பினள். காவலர் கைவிட்டார் என்றாலும், கண்ணே! உனக்காக உயிர் தாங்கி இருந்தேனடா! பேதை என்னைக் கைவிட்டாய். மகனே! இனி உன்னைப் பிரிந்து வாழேனடா, அப்பா! என்று அலறித் துடித்தாள் அரசி.

அயல் வீடுகளில் குடியிருந்த தெரிவையர் பலர் திரண்டனர். சுதமதி நிலையைக் கண்டு கண்ணீர் சிந்தினர். எவர் வந்து என்ன உரைத்தும் ஆறுதல் அடையவில்லை தாய் உள்ளம். பத்மாகரரும் அவர் மனையும் பலபடத் தேற்றியும், பெற்ற வயிறு எரிந்ததன்றித் தணிந்ததில்லை.

சிவசிவ சிவசிவ எனும் சிவ நாமம் கேட்டது. திடுக்கிட்டு யாவரும் திரும்பினர். ஆம். விடபன்மர் என்னும் சிவயோகியார் விறுவிறுத்து வருகின்றார்.

ஆஹா ஸ்வாமி! வரவேண்டும் என்று வணங்கி வரவேற்றார் பத்மாகரர்.

என்ன இது? இது என்ன கூட்டம்? ஏன் அழுகிறார்கள்?

அங்கு நிகழ்ந்தவைகளைப் பத்மாகரர் அறிவித்தார். அப்படியா செய்தி என்று முன்னேறி வந்த முனிவர், தாயையும் சேயையும் நோக்கினர்.

நிர்க்குணனே முக்கணனாய் நின்றுசகம் காட்டிவிட்டு
நிர்க்குணனாய் நிற்பதென நில்லாத தென்னமதி.

சுதமதி! என்னைப் பார்! என் வார்த்தையைக் கேள்! உடலும் பொருளும் மின்னல் நிலையது. உடலை யகன்ற உயிர், மற்றோர் உடலைத் தேடி யடையும். உண்டன மல மாம். ஒவ்வொரு நாளும் அது உடலை விட்டு வெளியாம். கழிக்கும் அது குறித்துக் கலங்குவார் இல்லை. அதைப் போல் இதையும் எண்ணல் அறிவுடைமை. இறந்தோரை இதுவரை அழுது மீட்டவர் எவர்? நீ விரும்பி இவன் பிறக்க வில்லை. உன் வெறுப்பால் இவன் இறக்கவில்லை. நிலத்தில் இருந்து எழும் புழுதி, மீட்டும் நிலத்திலேயே வந்துவிழும். அதுபோல், மாயையில் இருந்து எழுந்த எல்லாம் அந்த மாயையிலேயே மடங்கும். பாம்பின் வாய்ப்பட்ட தேரை போல், கால தத்துவத்திற்கு உட்பட்டுக் கலங்கி நிற்பர் மக்கள். இதனில் மகிழ்ந்திருக்க ஏது இடம்? உலகியல் வாழ்வில் சிவத்தை நினைந்து சீர்பெற வேண்டும். அமை தியை அடைய வழி அஃதே வழி. மறவாதே அம்மா! கவலையை விடு! நெஞ்சால் கடவுளை நினை என்று விளக்கமாக உபதேசித்தார் விடபன்மர்.

சுகமான உபதேசம் கேட்ட சுதமதி, மேகம்போல் பொழியும் கண்மழையைச் சேலை முகப்பால் துடைத்தாள். ஸ்வாமி! உங்கள் புனித மொழிகளால் உள்ளம் குளிர் கிறது. மீட்டும் ஏழைஎன்மனம் இடிகிறதே! மகனோடு என் ஆயுளும் முடியட்டும்! இனி எவர்க்காக நான் இருக்க வேண் டும்? நான் இருப்பது சோற்றுக்குக் கேடு; பூமிக்குப் பாரம். இனிய தங்கள் உபதேசம் எழுமையினும் தொடரும் என்று எழுந்தாள்.

காரிகையின் மனநிலையை விடபன்மர் கண்டார். உருகியது அவர் உள்ளம். தநயன் நெற்றியில் திருநீறு தரித்தார்; சுதமதிக்கும் கொடுத்தார். வேத ஐந்தெழுத்தை சேயின் செவியில் ஓதினார்; உங்காரம் செய்தார். அவ் வளவுதான்!

மைந்தன் கண்கள் மலர்ந்தன. கைகால்கள் அசைந்தன. பாழான இருவர் நோயும் பறந்தது. பொன்னாய் மின்னியது மேனி. தாயிடம் பால் பருகத் தாவியது சேய். இறந்த குழந்தை பிழைத்ததை அறிந்து, மகிழ்ந்த அன்னை மைந்

சந்ததமும் சின்மயமாய்த் தானிருந்தால் தொந்தவினை வந்துறுமோ என்று மதியாத தென்னமதி.

தனை எடுத்தாள். விடபன்மர் அடியில் வீழ்ந்தாள். கண்டவர் இன்பக் கண்மழை பொழிந்தனர். குவித்த கைகளால் முனிவரைக் கும்பிட்டனர்.

சுதமதி! பாலன் இவன் பெயர் பத்திராயு. பருவம் வரும்வரை பத்மாகரர் பாதுகாப்பர். கலையுணர்வு இவனுக்குக் கைவரும். அரசர்க்கு அரசாய் அமர்வன்; இது இவனுடைய எதிர்காலம்! வருகிறேன் என்று விரைந்து சென்றார் விடபன்மர்.

பத்மாகரர்க்கும் ஒரு மைந்தன் உண்டு. அவன் பெயர் சுனையன். வாழும் அவனுடன் பத்ராயு வளர்ந்தான். காலத்தில் இருவர்க்கும் உபநயனம் நடந்தது. சிவயோகியின் ஐந்தக்கர உங்கார உபதேசம் செவியில் பாய்ந்து இதயம் தங்கியிருந்தமையால், பத்திராயுவிற்குச் சிவசிந்தனையே சிறந்து இருந்தது. சுனையனுடன், கலைகள் முழுதும் சுலபமாகக் கற்றான். பதினாறு ஆண்டுகள் இடையில் பறந்தன.

பழைய சிவயோகியார் ஒருநாள் இவர்களைப் பார்க்க வந்தார். சுதமதி! என்னை உனக்கு நினைவில் இருக்கிறதா என்றார்.

அவர் அடி வணங்கிய அவள், ஸ்வாமி! இறந்தோம் என்று இடுகாட்டில் போடுமுன் எங்கட்குச் சிறக்க உயிரளித்த செம்மலே! மாபெருந் தகையான தங்களை மறக்க முடியுமோ எங்களால்.

பத்திராயு! இளமையில் உன்னை உயிர்ப்பித்தார் முனிவர் என்றேனே; அவர் இவரேதான் என்று மகனுக்கு அவரை அறிமுகம் செய்வித்தாள் அன்னை.

அப்படியா! ஸ்வாமி! வச்சிரவாகு மன்னர் இவ்வுடல் அளித்த தந்தை; என் உயிர்ப் பிதா தாங்கள் என்பதைக் காலையில்தான் அன்னை அறிவித்தாள். மாலையில் தங்களைச் சேவிக்கும் பாக்கியத்தன் ஆயினேன். அடியேன் தங்கள் அடைக்கலம் என்று அவர் அடி பணிந்தான் பத்திராயு.

மகிழ்ந்த முனிவர், அவனுக்குப் பொது வேதத்தின் அறத்துப்பாலை அருளினர். பொருட்பாலைப் புகட்டினர். ஆன்மக் காப்பான சிவகவசத்தையும் அறிவுறுத்தினர்.

கண்ட எல்லாம் பொய்யாகக் கண்டிருந்தும் காண்ப
உண்டெனவே பற்றி உழலுமதி பென்னமதி. [வையை

குழந்தாய்! இக்கவசத்தை உருவேற்று; அதன் பயனாக ஆற்றல் அதிகரிக்கும். ஆயுள் நீடிக்கும். திருவருள் துணை செய்யும். பெருவாழ்வு பெறுவை தெரிகிறதா? வாய்ப்பான காலத்தில் வருகிறேன் என்று, அங்கிருந்து விடபன்மர் அகன்றார்.

சிவகவச பாராயணம், ஆறு ஆண்டுகளாக இடையறாது இனிது நடந்தது. உறக்கத்திலும் உணர்வில் கவச உறவு இருந்தது. சிவ புண்ணியத்தில் சிறந்து விளங்கிய பத்திராயு, பல யானை பலம் படைத்தவன் ஆயினன்.

* * *

ஒருநாள் ஏராளமான சேனைகளுடன், ஒரு அரசனைக் கட்டித் தேரில் இட்டபடி, மன்னன் ஒருவன் விரைவதைப் பார்த்தான் பத்ராயு. கட்டுண்டவர் யார்? கொண்டு செல்பவர் யார்? என்று வழிப்போக்கரை வினவினன்.

வயது முதிர்ந்தவர் வச்சிரவாகு. அவரைச் சிறைப்பிடித்துச் செல்பவன் மகதநாட்டு மன்னன் என்றார்கள் அவர்கள்.

கொதித்தது மனம். என் தந்தையையா கொண்டு போகிறார்கள் என்று படபடத்தான். துணைவன் சுனயனுடன் மகத சேனைகளை எதிர்த்தான். பல யானை பலம் படைத்த பத்திராயுவால் இறந்தார் பலர். உயிர்க்கஞ்சி ஓடினர் பலர். தந்தையைக் கட்டவிழ்த்து வணங்கினன்.

நீ யார் தம்பி! அற்புதமானது உன் ஆற்றல்! உன் பேர் யாது? ஊர் யாது? என்று அன்போடு வினவினர் வச்சிரவாகு.

காலம் வரும்போது யான் யாரென அறிவீர். சிறந்த உம் நகர்க்குச் செல்லும்! என்று, தந்தையைத் தேரிலேற்றித் துணைவனுடன் இல்லம் திரும்பின மைந்தன், நடந்தவற்றை அன்பொடு தாயிடம் அறிவித்தான். முதலில் துன்பமும், இறுதியில் இன்பமுமாக இருந்தது சுதமதிக்கு இவ்வரலாறு.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இது என்று பதுமாகரர் மகிழ்ந்தார்.

* * *

நிடத மன்னன் சந்திராங்கதன். இவன் நளதமயந்திகளின் பேரன். சோமவார விரதப் பேறுபெற்ற சீமந்

சீரார் கழனித் திருநெல்லை யம்மைபதம்
சாராமல் என்னே சனித்திறந்தாய் நெஞ்சகமே.

தனிக்கும் இவனுக்கும் பிறந்த மகள் கீர்த்தி மாலினி. அழகும் குணமும் அமைந்த கீர்த்திமாலினியைப் பத்திராயுவிற்கு மணம் முடிக்கச் சிவயோகியார் தூண்டினார்.

அருமையாக நிடதநாடு அலங்கரிக்கப் பெற்றது. மன்னர் பலர் மணங்காண வந்துளர். தசானன நகர மன்னன் வச்சிரவாகுவும் வந்துளன்.

மணக்கோலத்தில் யோகியாருடன் வந்த பத்திராயு, வச்சிரவாகு மன்னரை வணங்கினன்.

ஆ! என் மானங் காத்த மாணிக்கம் அல்லவா! நீரா மணமகர்? மனமகன் யாரோ என்று இருந்தேனே!

என்ன இது? சந்திராங்கதரே! இந்த வீரனைப் பெற்ற புண்ணியவான் யார்?

அவரா! அவர் பெயர் வ ச் சி ர வா கு என்றூர் சந்திராங்கதர்.

என்ன வியப்பு! என் பெயரில் அப்படி ஒருவர் இருக்கிறூரா என்ன?

அதே சமயத்தில், நாதா என்று அலறு குரல். திடுக்கிட்டது சபை. ஓடி வந்து வச்சிரவாகுவின் பாதங்களைக் கண்ணீரால் நனைத்தாள் சுதமதி.

என்ன இது? என் சுதமதிபோல் இருக்கிறதே! ஒன்றும் தோன்றவில்லையே என்று திகைக்கும் வச்சிரவாகுவிற்கு, சிவயோகியார், விரிவாக பழைய கதைகளை விளக்கினூர்.

மாபெரும் பாவி என்னை மன்னிப்பாயா சுதமதி! விரட்டிய எனக்குப் பகைவரிடமிருந்து விடுதலை யளித்தான் உன் வீர மகன் என்று கண்ணீர் பெருக்கினன் காவலன். சிவயோகியாரின் பொன்மொழிகளால் ஒருவாறு ஆறுதல் அடைந்தனர் அனைவரும்.

திருமணம் இனிது நடந்தது. மனைவியை, வீர மகனை, திருமகள் போன்ற மருமகளைத் தேரில் ஏற்றி நகரையடைந்த வச்சிரவாகு, நல்ல நாளொன்றில் மகனுக்கு முடிசூட்டி மகிழ்ந்தான். தாம் செய்த தவறுக்கு வருந்தி சாந்தியடைந்தனர் சககளத்தியர்.

இதுவே சிவமென்றும் ஈது மனமென்றும்
அதனுல் விளங்கிலுனக்(கு) அறிவெங்கே நெஞ்சகமே.

இரண்டொரு ஆண்டுகள் இனிது சென்றன. சிவகவச பாராயணம் செய்யும்படி தன் ஆட்சிக்குள்பட்ட குடிகட் கெல்லாம் அரச ஆக்ஞை பிறந்தது. அதனால் சிவாலயந் தோறும் பாராயண பஜனைகள் நடந்தன. எங்கும் புளகாங் கிதம். எங்கும் அமைதி. அதனால் வான் சுரந்தது; நிலம் வளம் சுரந்தது; மகிழ்ந்து வாழ்ந்தனர் மக்கள்.

* * *

ஒரு நாள் பத்திராயு, மனைவியுடன் பூஞ்சோலையொன் றில் புகுந்தார். இன்பத் தென்றலை அனுபவித்தபடி, இரு வரும் சிவகவச பாராயணம் செய்து கொண்டு இருந்தனர்.

அபயம் அரசே! அபயம் அபயம் என்று தொண்டை வரளக் கத்தியபடி, உடல் நடுங்க மனைவியுடன் ஓடி வந்தார் ஒரு அந்தணர். திடுக்கட்டு அரச தம்பதிகள் திரும்பி நோக்கினர்.

கொடிய புலி ஒன்று எங்களைக் கொல்ல வருகிறதே! மணம் செய்துகொண்டு வரும் எங்களை மரண தேவதை போல் தொடர்கிறதே! ஐயோ ஐயோ என்று இருவரும் மாறி மாறி அலறினர். பதைத்துச் சினந்த பத்திராயு, அம்பை எடுத்துத் தொடுத்தற்குள், அந்தணர் மனைவியைப் பாய்ந்து பற்றியது புலி.

அலறித் துடித்த அவள், புலிவாயில் அகப்பட்டேன் பூபதி! ஐயோ தெய்வமே! எனக்குக் காப்பே இல்லையா? உமாபதி! நீலகண்ட ப்ரபோ! அவ்வளவுதான். அவள் ஆன்மா உடலை விட்டு அகன்றது.

விர்ரென்று பறந்தது பத்திராயு விட்ட கணை. என்ன வியப்பு! இலக்குத் தவறி விட்டது. கைப்பட்டவளை உண் ணக் கவ்வியபடி, மலைக்குகை நோக்கி ஓடி மறைந்தது புலி. அதைக் கண்டு புழுவாய்த் துடித்தது பூபதி மனம்.

குரூரமான புலி, என் எதிரிலேயே என் மனையாளைக் கொன்றதே! உடலையும் கொண்டு போனதே! ஐயோ! அருந்ததியும் ஒப்பாகாத அணங்கே! உனக்கு இப்படியும் ஒரு விதியோ? இதைக் கண்டும் இரும்பு நெஞ்சன் இன் னும் உயிர் தாங்கி இருக்கின்றேனே என்று, கன்றை இழந்த பசுவைப்போல் கதறுகின்றார் அந்தணர்.

பன்னாளும் காண்பவற்றைப் பற்றிநொந்துநைந்திருப்பது எந்நாள் தொலைத்தறிவா யென்றிருப்பாய்நெஞ்சகமே.

ஒரு அகதியின் துயரை அகற்ற முடியாத அரசே! உனக்கு வில்லும் கணையும் வேண்டுமோ? கதறிய பேதையைக் காக்க முடியாத நீ, இன்னும் உயிர்தாங்கி ஊர் ஆள எண்ணுதியோ? நல்லோர் கூறும் இழிவுரைக்கு நாணமுற மாட்டாயோ? என்று உருத்து உரைத்து மேலும் ஓலமிடுகிறார் அவர்.

அபயக் குரலும், பூவையின் துடிப்பும், தவறு இலக்குத் தவறியதும், அந்தணர் சொல்லும் நெஞ்சைச்சுட, காவலர் கண்கள் நீரைச் சிந்தின.

ஸ்வாமி! ஒரு பெண் பிள்ளையைக் காக்க இயலாத பேதை நான், இனி ஆட்சி செய்தல் ஆகாது. அடியேன் நாட்டை நீரே ஆளவேண்டும். உதவத் தவறிய இவ்வுடலை இன்றே தீக்கு இரையாக்கி விடுவேன்; இதுதான் சுருதி தருமம்!

அட போ ஐயா! அருமை மனையாளை இழந்த எனக்கு ஆட்சி வேறு வேண்டுமா?

ஸ்வாமி! என் மனம் குழம்பியுளது; உமக்கு உதவிய பின்னரே உயிர் விடுவேன்! என்னவேண்டும் சொல்லுங்கள்! தவறமாட்டேன்; தருகிறேன்!

இறப்பது திண்ணம் என்கிறீர்! அதன் பின் உமது இளம் மனைவி கதி யாதாகும்? என்றால் அல்லவா அவட்கு இக்கதி! நீர் இறப்பது உண்மையாயின், அருமை என் மனம் அமைதிபெற, கட்டழகுடைய உமது மனைவிக்கும் காப்பாக, அவளை என்மனைவி யாக்கிவிடும் பார்க்கலாம்!

பத்ராயுவின் மனம் இதைக் கேட்டுப் பதைபதைத்தது. என்ன சொன்னீர்? பிற எவையும் தரலாம்; மனைவியைத் தரும் மன்னவரும் உளரோ? இனிய மனைவியை இழந்த கவலையால் தத்துப் பித்தென்று உளறுகிறீர்! தகுதியுள்ளன கேளும்!

நான் சொல்வதுதான் சரி. தந்தால் உமது மனைவியைத் தாரும்! இன்றேல் எரிவாயில் நான் வீழ்ந்து இறக்கின்றேன். விதிர்க்கும் பாவம் உம்மை விழுங்கட்டும் என்று கொள்ளித் தேள்போல் குதிக்கிறார் அந்தணர்.

எந்நாளும் இன்பநிலை யீதென் றறிந்திருந்தும்
பன்னாளும் துன்பம் படலாமோ நெஞ்சகமே.

வாழும் மனைவியைக் கொடுத்தால் வசை உண்டாகும். சரியல்ல என்று மறுத்தால், சாபமொழி. என்ன சங்கடம்? பத்திராயு, மனையாளைப் பார்த்தார். கிடுகிடுத்து விழிக்கிருள் கீர்த்தி மாலினி.

தாயே! இனிமேல் இவர் தேவி நீ என்று வீறிட்டுக் கூவி, அங்கிருக்கப் பிடிக்காமல் அகன்ற அரசர், உரியவர்கள் மூலம், மூட்டிய தீயின் முன் வந்தார். எல்லாம் விறுவிறுப்பாக நடந்தன. உணர்ச்சியற்று நிற்கும் கீர்த்திமாலினியின் கைப்பற்றிய அந்தணர், தனனையே பார்த்து நிற்பதை பத்திராயு அறிந்தார். அதைப் பொருட்படுத்திலர்.

சிவகவச பாராயணம் செய்தார். மூல முதல்வா! ஆல முண்டவனே! காலகாலா! எளியேனை ப்ரபோ ஏற்றுக்கொள்ளும்! மாயாசமுத்திர கர்ம அலைகள், உள்ளுக்கும் கொள்ளாமல், வெளியிலும் தள்ளாமல் இடைப்படுத்தி விளைவித்த இடர் போதும்! போதும் இவ்வுலக போகம்! சிவசம்போ! வாழும்படி என்னை உமது அடிநிழலில் வைத்தருளும் என்று துதித்து, வலம் வந்து தீயை வணங்கினர்.

பாயும் நேரத்தில், ஆ! என்ன வியப்பு! விடைமேல் காட்சி தந்தான் விமலன். மலர் மழை பெய்தது வானம். பார்த்து மகிழ்ந்த பத்திராயு, பரமன் திருவடியைப் பணிந்தார். ஆநந்தக் கண்ணீர் பெருக்கி அலமந்தார்.

அன்பனே! முற்பிறப்பில் நீ செய்த பாவம் பல. அதன் பயனை இப்பிறப்பில் அடைந்தாய். ஒருநாள் அடியவர்க்கு உதவிய புண்ணியத்தால், எமதருள் தூண்ட முன்வந்தான் விடப முனிவன். சிவகவச பாராயண வளர்ச்சியால் உனக்குச் சேவை தர எண்ணினேம். உன் அன்பை உலகுணர, சுத்த மாயை புலியாக, உமையாளும் யாமும் சதிபதி உருவம் தாங்கினேம். வாய்மை காத்தாய்! வாழி வாழி நீ! இன்னும் சிலநாள் இருந்து, உலகை நல்வழிப் படுத்திப் பேரின்பப் பேற்றைப் பெறுவாயாக என்று அருளி, உருக்கரந்தார் உமை மணாளர். இவைகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்த குடிகள்,

ஹர ஹர ஹர ஹர ஹராய நம ஓம்! சிவ சிவ சிவ சிவாய நம ஓம்!

அச்சம் தவிர்ந்தநிலை யாமதனைச் சேராமல்
துச்ச வினைபுரியத் துணிந்தனையே நெஞ்சகமே.

என்றுஆடிப் பரமனைப் பாடிப் பரவினர். வாழ்ந்தனர் அருள் நிழலில் அத்தம்பதிகள். மூன்று கால்வழிக்கும் முத்தி சித்தித்தது. வாழ்க அடியவர்! வளர்க அவர் அன்பு!!

வேண்டுமா? வேண்டாமா?

(பொன்னையாப்பிள்ளை புவனகிரி)

பெறுமவற்றுள் யாவறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

என்பது தமிழ்மறை மொழி.

அருமையினும் அருமையாய் அரிதிற் பெறும் மனிதப் பிறவி பெற்ற அறிஞர்களில், சிலர் பிறவி வேண்டுவதென்றும், சிலர் பிறவி வேண்டாமென்றும் கூறிப்போந்தனர்.

யார்யார் எவ்வாறு கூறிப்போந்தனர் எனின்,

வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதை பாலகன் அதுஆகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

எனவும்,

ஆகம் நாமல்ல அந்த ஐம்பொறியும் நாமல்ல
ஏகனே நாமென் றுன்னும் இருடிகள் இதயத் துள்ளால்
பாகமாம் உமை மணளா பசுபதி பிறவி வேண்டேன்
சேகறு முத்தி வேண்டும் திருப்புலி வனத்துளானே.

எனவும்,

புழுவினம் நிறையும் ஆக்கை யொன்பது பொள்ளலாலும்
இழிபடும் மலங்கள் வீசும் இதனினும் நரகம் நன்றே
வழுவையின் உரிபோர்த்தாடும் வள்ளலே பிறவி வேண்டேன்

எனவும்,

பிறந்தவர் இறக்கையாலும் இறந்தவர் பிறக்கையாலும்
அறிந்துஉயர் பெரியோரெல்லாம் ஆக்கையை வெறுத்த [லாலும்
மறந்தும் நான் பிறவி வேண்டேன்

எனவும்,

தன்மயமீ தென்றுணர்ந்தும் தானதுவாய் நில்லாமல்
இன்னம் இடரடைவ தென்னமதி நெஞ்சகமே.

பிறந்தார் இறப்பர் இறந்தார் பிறப்பர்தம் பேதமையால்
மறந்தாயினும் பவம் வேண்டேன் மறைமுதல் ஆகமங்கள்
அறிந்தார் இணக்கமும் அன்பும் வணக்கமும் ஆனந்தமும்
செறிந்தாங்கு எனக்குஅருள் செய்யாய்.

எனவும்,

மாதா உடல்சலித்தாள், வல்வினையேன் கால்சலித்தேன்,
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே, இன்னமஓர் அன்னை
கருப்பையினில் வாராமல் கா

எனவும்,

இன்னும் பல அறிஞர்கள் இதுபோலவே பிறவி வேண்டாமென்று கூறிப் போந்தனர்.

இனி பிறவி வேண்டு மென்பவர்கள் யார் யாரெனில்? கூறுவாம்.

மறமலி உலக வாழ்க்கையே வேண்டும் வந்து நின் அன்பர்தம்
பணியாம்
அறமது கிடைக்கின் அன்றி ஆனந்தஅற்புத நிட்டையி னிமித்தம்
துறவது வேண்டும் மௌனியாய் எனக்குத் தூயநல்
அருள்தரின் இன்னம்
பிறவியும் வேண்டும் யான் எனது இறக்கப் பெற்றவர்
பெற்றிடும் பேறே.

எனவும்,

வேண்டும் யாவும் இறந்து வெளியிடைத்
தூண்டு வார்அற்ற சோதிப்பிரான் நின்பால்
பூண்ட அன்பர்தம் பொற்பணி வாய்க்குமேல்
மீண்டு சன்மம் எடுப்பன் அனந்தமே

எனவும்,

இறவில் எப்பதமும் பெற வேண்டிலேன் என்றும்
பிறவி வேண்டுவன் நின்திருப் பணிசெயப் பெறினே

எனவும்,

குனித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

எனப் பல அறிஞர்களும்கூறிப் போந்தனர். மணிவாசகரும்

ஈதென(து)யானிவனென் றெண்ணியெண்ணி யேழை
தீதடைந்தால்சீதளமும்சேருமதோநெஞ்சகமே[போல்

தவமே புரிந்திலன் தண்மலரிட்டு முட்டா திறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாம்
சிவமே பெருந்திரு வெய்திற்றி லேனின் திருவடிக்காம்
பவமே யருளுகண்டா யடியேற்கெம் பரம்பரனே.

என்று கூறியுள்ளார்.

ஆதலால் இருவர் அபிப்பிராயத்தின் காரணம் இன்னதெனத் தெளிதல் நலமே.

பிறவி வேண்டாமென்பவர், பிறவி எவ்விதத்தினும் துன்பமென்பதை நன்கு அறிந்தே வேண்டாமெனக் கூறினர் என்று யூகிக்க இடமுண்டு; இது யாவருக்கும் அநுபவமாதலால்.

பிறவி வேண்டு மென்றவர்கள், மறமலி உலக வாழ்க்கை வேண்டும் அன்பர் பணிசெயவும்; நின் திருப்பணி செயவும் நின்னுருவம் காணவும் உன் அருள் தரின், பிறவியனந்தம் வேண்டு மென்றனர்.

இவர்கள் சகள வடிவு கண்டு கேட்டவர் என்பதும், அல்லது நினைத்துப் பிரார்த்தித்தன ரென்பதும் விளக்கவில்லை. சகளம் மனோபாவமாகும், தேட்டங் திரண்ட திருமேனி யாதலால்.

திருமேனி தோன்றினும் ஈசனென அறியமாட்டார். தோன்றி மறைந்த பின்பே மதித்தறிவர். இதைச் சுந்தரர் முதலியோர்கள் சரிதைகளில் காணலாம்.

இவை உலகில் சாதாரண மக்களிடமும், ஏதாவது ஒன்று வேண்டுமாயின் தெய்வத்தை நினைத்தும், ஆலயஞ் சென்றும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்வதைக் காணலாம்.

அதுபோல் இரு வகுப்பினரும் பிறவித் துன்பம் அறிந்தவர்களே யாவர். பிறவித் துன்பமென்பது பிரத்யட்சமே. துன்பமாயினும், பெண்கள் பிரசவம் மிகக் கஷ்டமாயினும் ஆண்மகவு உதித்தால் சந்தோஷிப்பதுபோல், அருள் நலம் விரும்பிப் பிறவி வேண்டினர் ஓர் சார்பினர்.

மற்றோர் சார்பினர், பிறவி கூடாது; அருளின்பம் ஒன்றே வேண்டுமென விரும்பினராவர்.

பாச அடவிதனைப் பற்றிப் பயமடைந்தால்
மாசு தவிர்ந்தவெளி மன்னலுண்டோ நெஞ்சகமே.

நோயினையும் நோவினையும் நோய்செய் வினையினையும்
வீவினையுந் தீர்த்தருளும் வேங்கடமே—

என்றார் அறிஞர்.

பிறவி சாதனம், வஸ்து சாத்தியம்.

ஆதலால் வேண்டுமா! வேண்டாமா! என்ற தலைப்பு மொழிக்கு, விழித்தபின்பு கனவுண்டா என்பது விடையாகும்; விளக்கம் அடுத்த இதழில் காண்க.

வீடு

(C. V. S.)

வீடு என்பது ஜீவாத்மா குடியிருக்கும் இடம். ஒவ்வொரு வீடும் இன்ப துன்பங்களோடு கலந்து பொருந்தியிருத்தலே யாகும்.

இன்பமானது மனம், வாக்கு, காயம் மூன்றும் தூய்மை அடைந்து சன்மார்க்கப் பிரவிருத்தியில் ஈடுபட்டு வாழ் நாளை வாழும் நாளாகக் கண்டு மகிழ்தல்.

துன்பமானது மனம் ஒன்றுநாட, வாக்கு மற்றொன்று உரை செய்ய, காயம் பிறிதொன்று செய்ய, துன்மார்க்கப் பிரவிருத்தியில் ஈடுபட்டு வாழ்நாளை வீழும் நாளாக ஆக்கி வருந்துதல்.

இன்பமும் துன்பமும் அநுபவிப்பது ஆத்மா குடியிருக்கும் தேகம்தான். தேகத்தையே ஆத்மா எனக் கருதி விஷய சுகங்களில் மனம் நாடுதல், மேற்கூறிய இருவகைத் தான சுக துக்கங்களுக்கு முக்கிய காரணம். சுக துக்கங்களுக்கு மூவாசையாகிய மண், பெண், பொன் முதற் காரணம். ஆசைகளில் உழலும் மதியாகிய புத்தியை விஷய சுகங்களினின்று வாங்கி, அல்லது திருப்பி, குருநாதனின் பாதாம்புயத்தில் அன்புடன் செலுத்தினால், மதி நிம்மதி அடைந்து முக்தி அல்லது விடுதலையாகிய மெய் வீடு பெறலாமென்று சாஸ்திரங்களும், வழி நூல்களும்

வாசனைகள் யாதுமிலா மன்னு துரியந்தனிலே
தேசு பெறநிற்கத் திகைப்பேனோ நெஞ்சகமே.

ஆங்காங்கு எடுத்துரைக்கின்றன. ஆகவே தாபத்திரயங்களினின்று விடுதலை அடைந்து, அந்தம், நடுவு ஆதி ஒன்றுமில்லாத ஒரு தனி வீடு அல்லது துன்பம், இன்பம் ஒன்றுமில்லாத கேவலம் பேரின்பமாய், பிரம்மானந்தமாய் விளங்கும் பரம சாந்த நிலை அடைய சாது சங்கமும், சத்குரு சரணாரவிந்தங்களைப் பாடி, ஆடி மகிழ்தலும் முக்கிய சாதனம்.

மனமான மங்கை, ஐம்புல அடவியில் ஓடும் துராசை வஞ்சகர்களாகிய காமாதி வேடர்களின் குலத்தில் வளர்ந்து வருகையில், பூர்வ புண்ணிய வசத்தால் அறிவு திருமேனியாய் விளங்கும் சத்குருநாதனை அடைந்து, குரு கிருபையால் புருஷோத்தமனை மணந்து புணர்ந்து மகிழ்ந்து, தான் பெற்ற பிறவியின் பயனை அல்லது ஆத்ம ஞான ஆனந்த அநுபவத்தில் பொருந்த குருநாதனின் திருஅருள் சகாயமே முக்கியமானது. குருவின் திருஅருளுக்குப் பாத்திரமாக குருவின் வாழ்த்து அல்லது குரு பஜனமே சிறந்த சாதனம். பஜனம் அல்லது பாராயணம் செய்வதற்குத் தகுந்த சமயம் அடியார் திருக்கூட்டத்தின் சார்பும், தகுந்த இடம் அடியார்களாகிய அநுபவர் அமைந்த மெய்வீடாகிய பஜன மண்டபம் அல்லது அநுபூதி மண்டபமும் ஆகும்.

அநுபூதி மண்டபங்களில் அடியார்கள் கூடி, அநுபூதி பாராயணம் திருப்புகழ் முதலிய பஜனம் செய்யும் வகையில், குருநாதனை மூன்று வகையில் கூவிக்கூவி குருவின் திருஅருளைப் பிரார்த்தித்து வருகிறார்கள்.

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்து உணர்வுஎன்று அருள்வாய்"

—கந்தர் அநுபூதி

முருகன் அல்லது யாவர்க்கும் அறிவுதயமாகி ஆத்மபோதத்தை உதிக்கச் செய்யும் குருப்பிரம்மா என்றும், குமரன் அல்லது மேற்படி ஏற்பட்ட ஆத்மபோதத்தைத் தன்னைவிட்டு விலகாமல் பரிபாலித்துக் காப்பாற்றி வரும் குருவிஷ்ணு என்றும், குகன் அல்லது பஜனம் செய்யும் அடி-

---

சங்கற்ப காலந் தவிர்ந்தசம பாவனையில்
தங்கிப் பரமசுகம் சார்வதென்றோ நெஞ்சகமே.

யார்களுக்கு பரம சாந்தம் அளிக்கும் மஹேஸ்வரன் என்றும், குருநாதனை பஜனம் செய்து வாக்கால் மொழிந்து, மனத்தால் உருகி, காயத்தால் தொழுது மெய்யுணர்வாகிய ஆத்ம ஞான ஆனந்தம் அருளுமாறு பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியாகவே ஒவ்வொரு பாசுரத்திலும் கந்தர் அநுபூதியில் குருநாதனை மூவகையில் தோத்திரம் செய்து குருவின் திருஅருள் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

ஆகவே ஏனைய நூல்களுக் கெல்லாம் சிறந்து விளங்குவது கந்தர் அநுபூதியாகும். அநுபூதி பாராயணமும், புகழ் பஜனமும், அடியார் திருக்கூட்டமும் குருவின் திருஅருளுக்கு மூலகாரண மானபடியால், அடியார் திருக்கூட்டம் கூடும் அநுபூதி மண்டபமே மெய் வீடு எனக் கண்டு மகிழ்ந்து, ஜீவன் முக்தி நிலை அல்லது ஸ்வாநுபூதியாகிய பரம சாந்தம் அடைய குரு பஜனமே சிறந்த சாதனம்.

வாழ்வற வாழ்தல்

(வா. ராமலிங்கம் பிள்ளை)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது திருவள்ளுவர் திருவாக்கு

வாழ்வாங்கு வாழ்தல் என்ன என்று சிந்திப்போமானால், மானிட வாழ்க்கைப் பண்புக்கென முன்னோர் வகுத்தருளிய நெறி முறைகளைப் பற்றி விதிவிலக்கறிந்து, உள்ளுணர்வாய் உயிர்தோறும் இலங்கும் பரம பொருள் மனச்சாட்சி என்ற தன்மையால் உணர்த்தும் நல்லன தீயன என்பவற்றுள் நன்மையே கடைபிடித்து ஒழுகி நிற்றலேயாம். இந்த அடிப்படையில் வாழ முற்பட்டால் எந்த இடரும் பந்தமும் வந்து தாக்காது.

ஊழால் பொருந்துவன உற்ற போதுங்கூட ஏழை உயிர்களுக்கின்பம் நல்குதற்கே தாழாது மன்றினில் தகு நடம் ஆடும் தாணுவின் அருள் வாய்ப்பால் அஃது கதிர்

பாராமல் பார்க்கும் பரமவிழி பெற்றிருந்தால்
ஊரேது பேரே(து) உலகேது நெஞ்சகமே.

கண்ட பனிபோலக் கரந்திடும்: அன்றி நிரந்தரம் விரைந்து வாட்டுதல் செய்யாவாம்.

வாழ்வு என்பது தோன்றி நின்று மறையும் இடைக் காலத்தையே குறிப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த வாழ்வில் உண்ணல், உறங்கல் புணரல், பொன்றல் என்பன எவ்வுயிர்க்கும் இயல்பாய் அமைகின்றது. ஆனல் அறிவால் ஏற்றமுடைய மக்களினத்துக்கு இவ்வியல்போடு "வந்தவாறெங்ஙனே போமாறேதோ" என்பதை எண்ணி, இவை மாயமாகும் மகிழ்ச்சி தருவதுமல்ல என்ற திடம் கொண்டு, பின் மாருத மகிழ்ச்சி நிலை தரத்தக்கது எது என ஓர்ந்து, அதனை அடைதற்காம் குறிக்கோள் கொண்டு வாழ்வதே வாழ்வாம்: ஏனைய உலக போக நுகர்வாய வாழ்வுகளெல்லாம் ஆண்மைக்குரிய அழகியவாழ்வல்லவாம்.

"மடந்தைமார் மதிக்குமிந்த வாழ்வெனும் வாழ்வு வேண்டேன்" என்றும்,

அழிப்பர் ஐவர் புரவுடையார்கள் ஐவரும்புர வாசற வாண்டு
கழித்துக் கார்ப்பெய்து போகியபின்னை கடைமுறை உனக்கே பொறையானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை, வேண்டேன் மானுட வாழ்க்கை ஈதாகில்

எனவும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியுள்ளமையும் குறித்துணரத் தக்கது.

எனவே வாழ்வாங்கு வாழ்தல் தோற்றமும் இறப்பும் தோயப் பெறுது, ஒரு நிலைக்கான குறிக்கோளுடன், இடைக் காலமான இவ்வாழ்வு நிலையில் நல்லறம் நாட்டிப் புரிந்து அல்லன கடிந்தொதுக்கி வாழ்தல் என்பதாம்.

இனி வாழ்வற வாழ்தல் யாதெனச் சிறிது கருதுவமேல், முற்கூறிய வாழ்வு ஒரு தன்மைக் காம நிலைமையும், பின்னையது வேருெரு பண்பையும் உணர்த்தி நிற்பது காணலாம்.

முதற்கண் கூறப்பெற்ற வாழ்வு என்ற சொல், பொது நோக்காக உலக நிலைபற்றி வாழும் தன்மையைக் குறிக்கும். அதாவது யான் எனது என்று துய்ப்பனவற்றில் பற்றி நிற்கும் இயல்புடைய தன்மையாம். இஃது அற,

---

இந்தப் பெரும்பிரமா கார நிலை யெய்தர்மல்
தொந்தப் பிராந்திநிதம் தோய்ந்தனையே நெஞ்சகமே.

அதாவது துய்ப்பனவற்றில் தோயும் மனநிலை நீங்கப்பெற்ற போது, மற்றைய வாழ்வு. அதாவது பொதுத் தன்மை நீக்கிச் சிறப்பாம் செயல்களைச் சிந்தித்துச் சேரப் பெறுவதாம் நிலையுடைய வாழ்வு சித்திக்கும்: இதனைப்

"பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும் பெருந் துணையை"

என அப்பர் சுவாமிகளும்,

"சான்று காட்டுதற் கரியவன் எளியன் தன்னிற் தன்னிலா மனத்தார்க்கு"

என ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கூறியருளினர்.

இக்கூற்றை இனிது புலப்படுத்தி, சடமாம் தேகம் பொன்றினும், பொன்றாத நிலையுடைய வாழ்வில் தன்னை நிலைபெறச் செய்த பரம பொருளின் திருக்கருணையைப் புகழ்ந்து ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள்

உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த யோகமே
ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக்கழலே
செல்வமே சிவபெருமானே

என வாயாரப் போற்றினர். அது கண்டு பின் வழிவரும் நம்மனோர் உய்யுங் கருணையால் உரைத்தருளினர்.

எனவே இழிவுமிக்க உலகபோக மயக்கினில் நிற்கும் வாழ்வு நீங்க, இழிவும் அழிவும் இல்லாததும், நீங்காத இன்ப நிலையுடையதுமான சிவனடி சிந்தைபொருந்திய செம்மை வாழ்வு பொருந்தவும், அதனால் இனி யிறவா ஏற்றம் வாய்க்கவும் வாழ்வதே வாழ்வற வாழ்தல் என்ற பெருமிதவாக்கு என்பதையும் சிந்தித்து குறிக்கோள் கொண்டு வாழ்வோமாக.

அருள்வழி நடந்து பாசம் அறுக்குமா றுண மாட்டீர்
மருள்வழி நடந்து மேன மேல்வினை ஈட்ட வல்லீர்
தெருள்வழி கேட்பீராகில் சிவபிரான் கவச வாழ்வை
ஒருமுறை இறைஞ்சீர் என்றும் இன்பத்தேன் உண்ணலாமே
(சிவஞான சுவாமிகள்)

மோகாதி காரியங்கள் முற்றும் இறந்த பதத்(து)
ஓகோகோ சேராது உழல்கின்றாய் நெஞ்சகமே.

"துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை மேலவர்
அள்ள லார்வயல் சூழ்மணஞ் சோலையார்
வள்ள லார்கழல் வாழ்த்தல் வாழ் வாவதே."

(அப்பர் சுவாமிகள்)

"யாழின் மொழியா டனிப்பாகரைப் போற்றும் யாக
மூழின் முறைமை வழுவா தலகங்க ளான
வேழு முவப்பப் புரிந்தின் புறச்செய்த பேற்றால்
வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார்

(பெரிய புராணம்)

ஸ்ரீ வைஷ்ணவப் பகுதி 3

மங்களா சாஸனம்

(அன்பன்)

மங்களா சாஸனம் செய்வது மகத்தான தருமம். தனி ஒருவர் செய்வது தகுதியாகுமா? பலர் கலந்து பாடினால், ஆ! எவ்வளவு இன்பமாக இருக்கும்!

என்ன செய்வது இதற்கு? எப்படி அழைப்பது மக்களை?

(1) விருத்தியாகும் செல்வத்தை விரும்புகின்றார் பலர். (2) அற்புத சித்தியில் ஆர்வங் கொண்டு, அதற்கென்றே யோகத்தில் மோகம் கொண்டோரும் சிலர் உளர்.

(3) எம்பிரான் அன்பு வேண்டும்; அதற்கு அயலாய் ஒன்றும் வேண்டா என்று எண்ணுபவர் மிகச் சிலரே.

முன்னுரைத்த இருவர், சுயநலத்தில் சுழிப்பவர்கள். அந்தோ! விழலான பயனையே அவர்கள் விரும்புகின்றனரே! அவர்களையும் திருத்திப் பணி கொண்டால் ஆகாதா என்று, ஆழ்வாருடைய புனித இதயம் புகல்கிறது.

ஐம்பொறியும் ஐம்புலனும் ஆறி யடங்குமிடம்
நம்பிநம்பி நீயடையும் நாளென்றோ நெஞ்சகமே

உடல் உழைத்துக் கைங்கர்யம் எவ்வளவுதான் செய்தாலும், தேவதைகட்குத் திருப்தி விளையுமா? வித்தக மகிழ்ச்சி விளைவித்தாலும், அவர்கள் தரும் பயன் அற்பம் என்பதை அறியீரா? பயனெனக் கருதிய அழகு, செல்வம், அந்தஸ்துகளால் இடையறுத தொல்லைகள் எத்தனை எத்தனை தெரியாதா? சாரும் அவைகளால் சாந்தியடைந்தவர் யார்?

கேளுங்கள்! ஆண்டவன் தொடர்பிற்கு அயலாதல் ஆகுமா? எம்பிரானுக்குச் செய்யும் பணிகளில் சிரமம் என்பதே இல்லையே! ஆதிமத்யாந்த ரகிதன் நம் அன்பை அறியானோ? என்றும் உள்ள பயனை எண்ணுவது அல்லவா பேரறம்? பயனை விரும்பாத பணியில் அழுந்தியிருப்பதே அறிவுடைமை!

பரந்தாமனுக்குத் திருப் பல்லாண்டு பாடுவம்! வாழ்விக்கும் பாகவதர்கள் வருவார்களாக! வந்து என்ன செய்யவேண்டும் என்கிறீர்களா? அதையும் சுருக்கமாக அறிவிக்கிறேன்.

இன்றைய உலகில் மண்ணுக்கும் மணத்திற்கும் உரியேன் என்று அடிமை ஓலை எழுதுவது மரபு. அந்தக் குறிப்பின்படி,

'வாழாட் பட்டு நின்று உள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்'

சொல்வது புரிகிறதா? எம்பெருமான் திருக்கோயில் பிரமோற்சவ அங்குரார்ப்பணத்திற்கு, புழுதி மண்ணை வாரிக்கொண்டு வாருங்கள்! அன்புடன் மணம் நிறையும் திருவிழாவில், அபிமானம் வையுங்கள்! உலக மோகம் ஒழிய, இந்தக் கைங்கர்யத்தை மோந்துகொண் டிருக்கும் மோக நடையே சிறந்த யோக நடை என்று பேசுகின்றார் பெரியாழ்வார்.

பயன் கருதாமல் பணியாற்றும் அதிகாரிகள், அவ்வளவு எளிதில் அகப்படுவார்களா? ஆழ்வாரும் அதனை அறிவாராதலின், உள்ளீரேல் என்று சிறிது அழுத்தி நிறுத்தி அழைக்கின்றார்.

பற்றுமல் பற்றும் பரமசுக நிட்டைதனைப்
பெற்றிருந்தால் என்னகுறை பேசாய்நீ நெஞ்சகமே,

'வயிறே வாழ்ந்திடுவாய்—நீ
வாடச் சகிப்பேனே
வயிறுலே அன்றே
மேதினி வாழ்வது' என்று பாடி,

வயிறோம்புதல் ஒன்றிற்கே வழிதேடிப் பல்லாண்டு பாடுதல் பவித்திரம் ஆகுமா? கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் என்று அல்லவா உலகம் அழைக்கும் உங்களை? எம்பெருமான் இடத்தில் எதையும் எதிர்பார்த்தல் கேவலம்! கரும்பு தின்னக் கூலி கேட்கலாமா?

'கூழாட்பட்டு நின்றீர்களை
எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்'

என்றும் கூறுகிறார். உண்மையை உறுத்தி உரைத்தால், நாணம் இதயத்தில் நடமிடும்; அதனால் நலம் விளையும் என்பது ஆழ்வார் திருவுளம்.

அப்படியானால் நீங்கள் எந்தப் பரம்பரை என்கிறீர்களா? அதையும் சொல்கிறேன் கேளுங்கள்!

முன்னே கால்வழி மூன்று; பின் மூன்று தலைமுறை; நடுவில் நிற்பவர் நாங்கள்! இங்ஙனம் ஏழு தலைமுறைவரை நாங்கள் பழுதே அடையாத பணியாளர். அதுமாத்திரம் அல்ல!

என்றோ நிகழ்ந்தது இராவண வதம். அதை இன்றும் எண்ணி, எம்பெருமானே! உனக்குச் சிரமமே தோன்றாது இருப்பதாக! வளர்ந்த உன் கோதண்டம் வாழ்வதாக! நாந்தகம் எனும் வாள்படை நலம் பெறுவதாக! வாய்மையான உனது நாமம் எங்கும் வளர்வதாக! ஸ்ரீசீதாபிராட்டியார் சிறந்திருப்பாராக! பாதுகாப்பாளர்களான இலட்சுமண பரத சத்ருக்நர் இனிதிருப்பாராக! நீ வாழ்க! உன்னை வாழ்த்தற் பொருட்டு என்றும் இனிது வாழ்ந்து யாங்கள் இருப்போமாக என்று, பகவானுக்கு மங்களா சாஸனம் பண்ணுபவர் நாங்கள் என்று, விறுவிறுத்து ஆழ்வார் விளம்பரிக்கும் நடையே வேத நடை.

பரம லட்சணமான எங்கள் கூட்டத்தில், பயன் கருதாமல் பணியாற்ற மனமிருந்தால் வாருங்கள்! மற்றவர்க்கு இல்லை இங்கு இடம்! என்கிறார்.

ஆன்ம உருஅகண்டம் அந்தவுரு ஆகாமல்
தானொருவன் போலாய்ச் சலித்தனையே நெஞ்சகமே.

சோறு கண்ட இடமே சுகம் என்று இருக்கும் வயிற்று ஆழ்வார்கட்கும், சொத்து கண்ட இடமே சுவர்க்கம் என்று எண்ணும் ஆடம்பர ஆஸ்திக மணிகட்கும், உலகை மருட்டும் சித்திகளே உயர்ந்ததென உகக்கும் மருளர்க்கும், இங்ஙனம் வாழ வழிகாட்டும் ஆழ்வாரை மறக்க முடிவதில்லை மக்கள். பரம பவித்ரமான ஆழ்வார் பாடும் பாசுரத்தைப் பாருங்கள் !

> **வாழாட்பட்டு நின்றுள்ளீரேல், வந்து மண்ணும் மணமும் கொண்மின்;**
> **கூழாட்பட்டு நின்றீர்களை, எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்**
> **ஏழாட்காலும் பழிப்பிலோம்; நாங்கள் இராக்கதர் வாழ்இலங்கை**
> **பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே**

(பொழிப்புரை.) வாழ்வதற்கு வழியாக (எம்பிரானுடைய) அடிமைத் திருப்பணியில் ஈடுபட்டு நிற்பவர்கள் இருப்பீரேல், (எம்முடன்) வந்து கலந்து, (அமலனுடைய திருவிழாவின் திருமுளைத் திருநாளிற்கு உரிய) புழுதி மண்ணைச் சுமக்க எண்ணுங்கள்! (அந்த விழாவில்) அபிமானம் கொள்ளுங்கள்! உணவைமட்டும் கருதி (அயலவரிடத்தில்) அடிமைப் பட்டோரை எங்கள் கூட்டத்தில் சேர்க்கமாட்டோம்! நாங்களோ, ஏழு தலைமுறையாகக் குற்றம் ஒன்றும் செய்தறியோம்; அரக்கர் வசித்த இலங்கையில் இருந்த ஆள்கள் அனைவரும் இறந்து பாழ்பட, (குரங்குச்) சேனைகளைக் கொண்டு போரிட்ட பெருமாளுக்குப் பல்லாண்டு பாடும் பயனுள்ள தொழிலர் யாம், (எ-று.)

என்ன அருமை! பாசுரத்தை ஊன்றிப் படிக்கும் போதே எவ்வளவு ஆநந்தமாக இருக்கிறது! பயன் கருதாமல் பணியாற்றும் அந்த ஒன்றே ஆஸ்திகம். அதற்குப் பக்தர் படையைத் திரட்டுவது பயனுள்ள திருப்பணி. அந்த அருமையை அடியொடு மறந்து, இன்று எந்த இடத்தும்

சச்சிதா னந்தத் தனிவீட்டில் வாழாமல்
நச்சுருவாம் காட்சிதனை நாடினைந்தாய் நெஞ்சகமே.

மனம்போன போக்கில் எண்ணி, வாய்போன போக்கில் வார்த்தை உரைத்து, காலத்தை வறித்து கழிக்கும் அபக்த சிகாமணிகளை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்றார் மேலோர். பெரியாழ்வார் திருப்பல்லாண்டை ஊன்றி உணர்ந்து, வாய்மை வழுவாமல் அநுசந்திப்பதே வாழ்வதற்கு உரிய வழி.

வாழ்க வையகம்!

பக்தியின் சக்தி

(ஆ. கி. ரங்கராஜன்)

(84-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாள் சுசீலை தன் கணவரை அணுகி, "ப்ராணேச! தாங்கள் எனக்காக ஓர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்" என வேண்டி நின்றாள். குசேலர், "சுசீலா! எந்த ஒரு விஷயமும் நீ அறியாது நான் செய்வதில்லை. அப்படியிருக்க, புதிதாக என்ன விண்ணப்பம் தெரிவிக்கப் போகிறாய்?" என்று வினவினார்.

சுசீலை கூறினாள்: "நாம் பட்டினியாய் இருந்தாலும் தோஷமில்லை. நமது குழந்தைகளும் பசியால் வாடுகின்றனர். துவாரகையின் அரசரும் தங்கள் அரும் நண்பருமான கண்ணபிரானிடம் தாங்கள் நேரில் சென்று முறையிட்டால் நமக்கு க்ஷேமம் உண்டாகும் என்று நினைக்கிறேன்.

குசேலர்;—சுசீலா! நீ சொல்வது சரிதான் என்றாலும், கண்ணனிடம் சென்று அழியத் தக்கதான பொருள் வேண்டுமென்று நான் கேட்பது?

சுசீலை:—அழியத்தக்க அப்பொருளைக் கொண்டுதான் நால்வகைப் புருஷார்த்தங்களை மாந்தர் அடைகின்றனர். பிள்ளைகளைக் காப்பது பெற்றோரின் பொறுப்பு அல்லவா? அதற்காகத்தான் இதைக் கூறினேன்.

குசேலர்:—எல்லாம் அறிந்தவன் கண்ணன்! அவனிடம் இச் சிறு விஷயத்திற்காகத் துவாரகை செல்ல வேண்டுமா?

சான்றோர் துரியமதைச் சாராமல் நாடோறும்
தோன்று விடயமதைச் சுட்டினையே நெஞ்சகமே.

அது உன் விருப்பமாயின் அப்படியே சென்று வருகிறேன். ஆயினும் அரசனும் விளங்கும் கண்ணனுக்கு ஏதேனும் காணிக்கை எடுத்துச் செல்லவேண்டுமே! என்ன செய்வது?

குற்றமுணர்தல்

சுசீலை.—அதற்காகத் தயங்க வேண்டாம். சிறிது நெல் இருக்கிறது. அதை அவல் செய்து தருகிறேன். எடுத்துச் செல்லுங்கள்.

இம் மொழியினைக் கேட்ட குசேலருக்குச் சிறுவயதில் கண்ணனிடம் விளையாட்டாகச் செய்த தமது குற்றம் நினைவுக்கு வந்தது. அதற்குப் பின் தாம் அடைந்த இன்னல்கள் ஒவ்வொன்றும் தமது மனக்கண் முன் தோன்ற, மெய் சிலிர்க்கத் தமது மனைவியை நோக்கி, "சுசீலா! என் கண்களைத் திறந்தனை! நீ அவலைத் தயாரித்துத் தா. நான் நிச்சயம் துவாரகை சென்று வருகிறேன்" என்றார்.

சுசீலை அவல் தயாரித்தாள். மறு நாளே குசேலர் தமது பழைய கிழிந்த துணியில் அவலை முடிந்து கொண்டு துவாரகை சென்று அடைந்தார்.

கோட்டை வாயிலில்

கோட்டையைக் கடந்து செல்ல காவலாளர்கள் அனுமதி மறுத்தனர். குசேலர் அவர்களிடம், கண்ணன் எனது பாலிய நண்பர். நானும் அவரும் ஒன்றாகப் படித்தோம். அவரைப் பார்க்கவேண்டும். வழிவிடுங்கள்" என்று கெஞ்சினர். காவலாளர்கள் நகைத்து, "யாரையா நீர்? உமக்கென்ன வெறிபிடித்து விட்டதா? ஏதேதோ உளறுகிறீரே! போ ஐயா போம்!" என்றனர். மற்றொருவன், "ஆளைப் பார்த்தால் கந்தல் உடைகள், நரைத்த தலை, வெளுத்துப் போய் சுருங்கிய தோலும் எலும்புக் கூடுமாய் இருக்கிறார். கண்ணனோடு படித்தவராம்! நம்புவதற்கு இடமிருக்கிறதா?" எனச் சிரித்தான்.

சுருங்கக் கூறின் குசேலர் காவலாளர்களால் வெளியே தள்ளப்பட்டு மூர்ச்சையாய் விழுந்தார். அவ்வளவுதான்

பாவனைகள் யாதுமிலாப் பானநிலை யெய்தாமல்
தீவினையைச் சேர்வதென்ன சிந்தனையோ நெஞ்சகமே.

தாமதம். பாமை, ருக்மிணி முதலியோருடன் கண்ணன் ஆடிக்கொண் டிருந்த ஊஞ்சல் பலகையின் சங்கிலிகள் இற்றுப் பலகை திடீரென்று கீழே விழுந்தது. விஷயம் உணர்ந்த வேந்தன் குசேலரிடம் விரைந்தனன்.

பற்றற்றவர் சந்திப்பு

காவலாளரும் மற்றவரும் திகைக்க, குசேலரைச் சிவிகையில் ஏற்றி, சகல மங்கல வாத்தியங்களும் முழங்க, கண்ணன் தனது கொலு மண்டபம் சேர்ந்தனன். தன்னுடைய இரத்தின சிங்காதனத்தில் அவரை அமர்த்தி சகல உபசாரங்களும் செய்தனன். பாமை, ருக்மிணி முதலியோர் சாமரம் வீச, தனது நவமணிகள் பதித்த மகுடத்தை அவருக்குச் சூட்டினன். பரம ஏழையான குசேலர் பிரமித்தார்.

பற்றற்றவன் கண்ணன். பற்றுக்களை ஏற்படுத்துபவனும், அவற்றை ஒழிப்பவனும், அவற்றிற்குக் கட்டுப்படாமல் விலகி நிற்பவனும், பற்றுக்களின் சொரூபியும் ஆகிய யாவும் கண்ணன்; இத்தகைய சக்தி கொண்ட கண்ணன் பக்தர்கள் தன்மீது கொள்ளும் பற்றுக்குப் பணிந்து விடுகிறான்!

குசேலருக்கு அருள் செய்யக் கண்ணன் திருவுளம் கொண்டனன். ஏதுமறியாதவன்போல் குசேலரிடம், "பெரியீர்! தாங்கள் இங்கு விஜயம் செய்தமையால் நாங்கள் அனைவரும் புனிதம் அடைந்தோம். இருப்பினும் தாங்கள் எனக்காக ஏதேனும் கொண்டு வந்திருப்பீர்கள் என்று அடியேன் கருதுகிறேன்" என்றனன்

குசேலர், "மாயக் கண்ணா! உனது சாமர்த்ய வார்த்தைகளை எவரே வர்ணிக்க இயலும்? ப்ரபஞ்சத்திற்கே காரண பூதனாக விளங்கும் உன்னை அறிந்தோருக்கும் அடைந்தோருக்கும் நிரந்தர இன்பமே ஸித்திக்கும் என்பதை யான் உணர்வேன். உனக்காக சிறிது அவல் தயாரித்து எடுத்து வந்துள்ளேன்" என்று அவலை வெளியே எடுத்தார்.

கண்ணனும் ஏதோ நினைவுக்கு வந்ததுபோல "அடடே! அவல் கொண்டு வந்திருக்கிறீர்களா?

தூங்காமல் தூங்கும் சுகநிலையில் செல்லாது
நீங்காமல் துச்சவினை நீபுரிந்தாய் நெஞ்சகமே.

எப்பொழுதோ தங்களிடம் கேட்டேனே! அதை ஞாபகம் வைத்துக் கொண்டு இப்போது கொண்டு வந்துவிட்டீர்கள்! ரொம்ப சந்தோஷம்! எங்கே? இப்படித் தாருங்கள்!" என்று அவரிடமிருந்த அவலை வாங்கிக் கொண்டான்.

அன்பர்க் கன்பனுய்த் திகழும் இறைவன் அருள் பாலிப்பதை எவரும் அறிய இயலாது. அவனது அருளை அடைந்து அனுபவிக்கும் போதுதான் ஆண்டவன் கருணை சமுத்திரன் என்பதை உணர்வர். உதாரணமாக,

திரௌபதி துர்ச்சாஸனனுல் அரசவையில் அவமதிக் கப் படுகையில், கண்ணனை நினைந்து அலறினுள். உடனே அவளது உடைகள் பலவாக அதிகரித்தன அனைவரும் திகைத்தனர். சிறிது நேரம் கழிந்து சுய உணர்வு வந்தபின் தான் திரௌபதி அச்சுதனின் கருணையை அறிந்து போற் றினுள்.

கோபன்னு என்னும் இராமதாஸர் பனிரண்டு வருட காலம் சிறையில் உழன்று விரக்தியுடன் விஷமருந்த நினைக் கையில் உறக்கம் ஏற்பட்டது. நவாப்புக்கு சேரவேண்டிய தொகையை இறைவன் மாறுவேடத்தில் சென்று செலுத்தி, இராமதாஸர் வைத்திருந்த விஷக் கோப்பையைச் சாய்த்து உடைத்து மறைந்தான். நவாபின் ஆட்கள் தன்னை விடு தலை செய்ய வரும்போதுதான் இராமதாஸர் காகுஸ்தனின் கருணையை உணர்ந்து வியந்தார்.

யாத்திரை சென்ற தியாகராஜ சுவாமிகளின் சிவிகை யைத் தூக்கிச் சென்றவர்களை வழிமறித்த சில துஷ்டர்களை, அச்சுதன் போலீஸார் போல் தோன்றித் துரத்தினன். அத்துஷ்டர்கள் தியாகராஜரை சரணடைந்த பின்புதான் தியாகராஜர் அச்சுதனின் அன்பை உணர்ந்தார்.

மாணிக்கவாசகரை அரிமர்த்தனன் ஏவலர்கள் துன் புறுத்தசகியாத சிவபிரான், மதுரையைவெள்ளம்சூழும்படி செய்து, வந்தியாளாகத் தோன்றி, குறும்புகள் செய்ய அர சன் சினந்து அடித்தனன். தனதுபிழை உணர்ந்து நமஸ் கரித்தபோதுதான், அவர் ஆண்டவனின் அருளை உணர்ந்து துதித்தார் அதைப்போலவே, குசேலரின் வறுமைப் பிணி

காண்பவற்றை முப்பொழுதும் காட்சியறத்தோற்றுவிக் மாண்புடைய சித்தின் மடிவதென்றே நெஞ்சகமே.[கும்

நீங்கவேண்டும் எனக்கருதிய இறைவன், பல கிழிசல்கள் கொண்ட அக் கந்தல் துணி முடிப்பை அவிழ்த்து ஒருபிடி அவலை எடுத்து வாயில் போட்டுக் கொண்டனன்.

பூவுலக ஸ்வர்க்கம்

மழை பெய்தால் எப்பக்கங்களிலும் நீர் ஒழுகுவதும், வெயில், மின்னல் ஒளிகள் ஊடுருவுவதுமான குசேலரின் கூரை வீடு மாபெரும் மாளிகையாக வளர்ந்தது. நீர்நிலை, பூம்பொழில், தானியக் குவியல்கள், ஆடை ஆபரணங்கள் பல நிறைந்து ஸ்வர்க்கம்போல் விளங்கியது.

பட்டினியால் சுருண்டு தூங்கும் தனது குழந்தைகளுடன் சுசீலை துவாரகை சென்ற தன் கணவரை நினைந்த வண்ணம் தன்னை யறியாமல் சிறிது துயிலுற்றனள். பளிச்சென ஓர் ஒளி தோன்றி மறைந்தது கண்டு திடுக்கிட்டு விழித்தனள் சுசீலை. திக்பிரமை கொண்டாள். பின்னர் இவை கண்ணனின் கருணையால் ஏற்பட்டதென உணர்ந்தாள். கணவரையும் கண்ணனையும் துதித்து ஆடிப் பாடினுள். சமையல் அறைக்குச் சென்ருள். அங்கு தங்கப் பாத்திரங்களில் பலவகையான ஆகாரங்கள் இருப்பதைக் கண்டாள். "கண்ணு! எல்லாம் உனக்கே அர்ப்பணம்!" என்று கூறி அவற்றைத் தன் மக்களுக்கு அளித்துத் தானும் உண்டாள். வந்த அதிதிகளுக்கும் வாரி வழங்கினுள்.

"ஆஹா! அவல் ரொம்ப ருசியாய் இருக்கிறது! இப்படி எப்போதும் நான் ரசித்து அவல் தின்றதில்லை ஸ்வாமீ!" என்று கூறிக்கொண்டே கண்ணன் அவலில் மற்றொரு பிடியை எடுத்து வாயில் போட்டுக் கொள்ள எத்தனித்தான். நிகழ்ந்த யாவையும் அறிந்திருந்த திருமகளான ருக்மிணிதேவி, இந்த பிடி அவலினுல் தாங்கள் அனைவருமே குசேலருக்குத் 'தொண்டு செய்யும் அடிமை'களாகிவிட நேருமென அறிந்து கண்ணனின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

அகிலத்தை உண்ட அச்சுதன் அவலையும் உண்டு களித்தனன். "ஸ்வாமீ! தாங்கள் துவாரகைக்கு வந்து

நீர்த்தரங்க முந்நீர்போல் நின்று விளக்கறிவின்
வாத்த படிரமித்து வாழ்வதென்றோ நெஞ்சகமே.

மூன்று நான்கு நாட்களாகி விட்டதே! தங்கள் மனைவி மக்கள் தங்களுக்காகக் காத்திருப்பார்களல்லவா? உடனே புறப்படுங்கள்!" என்று குசேலரை அவசரப்படுத்தி, அவருக்கு அணிந்திருந்த உடைகளையும், அணிகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டு, பழைய கந்தல் உடையுடன் வழியனுப்பினன் பரந்தாமன். குசேலர் பற்றற்ற ஞானி யாகையால் மனத்தில் யாதொரு கிலேசமுமின்றி புறப்பட்டு, துவாரகையை விட்டு நீங்கி யமுனையைக் கடந்து தமது ஊரை அடைந்தார். அவரது வருகையை எதிர் நோக்கிய மாந்தர்கள் இன்னிசை வாத்தியங்கள் முழங்க அவரை வரவேற்றனர்.

கண்ணனையே தியானித்த குசேலருக்கு எதுவும் விளங்கவில்லை. "கருணாகரா! கேசவா! இன்னுமா சோதனை! எனக்கு வழி புலப்படவில்லையே! மீண்டும் துவாரகைக்கு வந்துவிட்டேனே! தயவு செய்யமாட்டாயா?" எனப் பலவாறு கண்ணனை நினைந்து முறையிட்டார்.

அப்போது சுசீலை ஓடோடி வந்து தன் கணவரை நமஸ்கரித்து, "வாருங்கள் என அழைத்தாள். அவளது உடலின் மீதுள்ள ஆடை யணிகளைக் கண்டு திடுக்கிட்டு, "நீ யார்? சுசீலைதானு, அல்லது கண்ணனால் ஏவப்பட்டவளா?" என்று வினவினர். சுசீலை, "சுவாமி! எல்லாம் கண்ணனின் அருள். இதோ காணப்படுவது நமது இல்லம்தான்" எனக்கூறி வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

வீடு அரண்மனைபோன்று காணப்படுவதையும் சகல ஐஸ்வர்யமும் நிறைந்திருப்பதையும் கவனித்த குசேலர், இறைவன் தனக்கு அறிவிக்காமல் செய்த திருவிளையாடலை நினைந்து வியந்து உருகினர். சுசீலையை நோக்கிக் கூறினர்:— "இச் செல்வம் இறைவனுடையது. இதை நாம் இறைவனடியார்க்கும் இரந்து வருபவர்க்கும் அதிதிகளுக்கும் அளித்தலே நமது கடமை. அவ்வாறு செய்யின் அவன் அகமகிழ்வான்" என்றார். அதற்குச் சுசீலையும் இசைந்தாள்.

அவ்வாறே அவர்கள் எதிலும் பற்றின்றி துறவிகளாகவே வாழ்ந்தனர். பற்றற்றவனுகிய பரமனின் மீதே பற்

திறிபிடிக்கும் சாட்சியெனும் சின்மயமாய் நில்லாமல்
குறிபிடித்து நாடோறும் குலைகுலைந்தாய் நெஞ்சகமே.

றுக் கொண்டவர்களாய் அநேக தர்மங்கள் புரிந்து இறுதியில் இறைவனுடன் இரண்டறக் கலந்தனர்.

இல்லற மல்லது நல்லற மன்று

—கொன்றைவேந்தன்

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

—திருக்குறள்

...விட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே

—தாயுமானர்

இவ்வாறு பக்தியின் சக்தியாய் பரமனை வசீகரித்த குசேலர் ஓர் சாது என்று நாம் கூறினுல் மிகையாகாது.

பக்தியின் சக்தியால் பாரகம் வாழ்க!

(தொடரும்)

THE SPIRIT OF PEACE

From ancient times the culture and religion of this land, with all its divisions and sub-divisions which have but added variety and beauty, have declared and worked for the achievement of Peace as the ultimate **summum bonum** of human existence and effort. Peace so understood is a live force and does not indicate mere absence of friction between individuals composing society or between groups of such individuals. The realisations of the worthiest of our men have been embodied in the Upanishads. The Eesha Upanishad proclaims "That is perfect (Poornam). This is perfect. Perfect comes from perfect. Take perfect from perfect, the remainder is perfect.

May Peace, peace, peace be everywhere. Peace is the breath of this transcendental philosophy. In fact it is the life of all beings.

The Katha-Upanishad at the very start contains a universal prayer which deserves to be at once the objective of and one message to all true and sincere Peace lovers.

"May He protect us all (both).
May He take pleasure in us all.
May we weld together in courage.
May spiritual knowledge shine before us.

May we never hate one another. May peace, Eternal Peace, Soul-filling peace be everywhere." There is hardly any auspicious function among Hindus which is not preceded or concluded with this invocation. The Katho-Upanishad whispers a truth-Eternal and Universal. Man cannot be satisfied with wealth or logic. It declares that the attainment of Santhi or peace within takes man to the land of eternal joy and immortality. The Supreme self of man is of Peace. Whoever finds it is a World's wonder, whoever expounds it is a world's wonder. The threefold wonders of great men and women spreading peace principles and conquest of the lower self are before us. Our message will be:

Tell the mind that the whole world is one and let it not divide and trouble. Let us unify in peace.

The basic foundation of all peace must be the realisation that all life is divine and in the unbroken unity of that life-thread are strung all the worlds above and below and all beings therein. Who serves fellow men serves God Of such a man who holds the torch light of Peace, the Upanishads declare, his mind is himself; speech his wife; life his offspring; eyes his human wealth;

ears his divine wealth; his body his work. By this fivefold sacrifice he becomes the beloved of the Lord and all the worlds.

The elevation of the human mind to the standard requisite to discard all traces of covetousness, and fear, to delight in the prosperity of fellowmen all over the world and to contribute thereto is basic of the true spirit of peace.

The armaments will not bring us anywhere near the natural Peace of man as man. Peace of the Jail or peace of the Cemetry is not the peace of the Swarajist or the living freeman of the world. We will aid the great efforts taken by the Premier by spreading the virtues, and the conditions of restraint under which alone Peace comes to men. Let violence and threat of violence be banned between man and man and nation and nation. When this is achieved it will be the Red letter day of this great movement Let service be our wealth. Let universal love be our motto. Let us all be first men and human in every sense of the term. Divinity will surely dawn then and give us peace on earth and also the peace that passeth understanding.

Lead me from the unreal to the real.
Lead me from darkness to Light.
Lead me from death to Immortality.
Om ! Santi ! Santi ! Santi !

—*Thiruppugal Mani*

சமனார்விடும் படர்பாசமும் தடியும்பிடித் தெதிர்மேவியே
குமையாமுனம் எளியேனையாள்; குமரேசனார் மகிழ்முன்னவா!
அமராபதிக்(கு) இறையோ(டு,)அரா அணைமாயனார், முனிவோர், மணக்
கமலாசனன் புகழ்சோதியே! கணநாயகா!! கணநாயகா!!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924 Phone:—118

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள்	0	6	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி பக்தர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.